# திருமலைத்தீபம்

Thirumalaitheepam

எழுந்து ஒளி வீசு

திருகோணமலை மறைமாவட்டத்தின் மாதாந்த பத்திரிகை

சுடர் - 64
விலை ரூபாய் 30.00

தீபம்-64 | மார்கழி, தை - 2020,
ஆரம்பம் 15 மாசி - 2013




திருமறைக்கல்வி நிலையம்,
இல: 297, கடற்படைத்தள வீதி, திருகோணமலை.

E-mail : catetcota@gmail.com
T.P : 026 2221022, 026 2054362


## கடவுளே உமது முக ஒளியைக் காட்டி எம்மை மீட்டருளும். (தி.பா 88:3)



## Happy Birthday!

டிசெம்பர் 09 : பேரருட்திரு ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை
டிசெம்பர் 17 : திருத்தந்தை பிரான்சிஸ்
டிசெம்பர் 25 : பேரருட்திரு கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை

**இவர்களது பணிவாழ்வு சிறக்க**
**செபிப்போம் வாழ்த்துவோம்.**

திருமலை மறைமாவட்ட
குருக்கள், துறவியர், பொதுநிலையினர்.

## திருகோணமலை மறைமாவட்ட கரோல் பாடல் போட்டிகள் - 2019



திருகோணமலை மறைமாவட்ட அலை ஓசை கலைத் தொடர்பகம் 05.12.2019 அன்று பங்கு ரீதியாக கிறிஸ்து பிறப்பு கரோல் பாடல் போட்டிகள் பி.ப 3.45 மணியளவில் பேராலய கலாச்சார மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வுக்கு எமது மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு கிறிஸ்ரியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தார். கிறிஸ்து பிறப்பு கரோல் பாடல் போட்டியில் தமிழ் பிரிவில் 11 பாடகர் குழுக்களும் சிங்கள பிரிவில் 01 குழுவும் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இப்போட்டியில்,

**பேராலயம் - முதலாம் இடம்** **அன்புவளிபுரம் - இரண்டாம் இடம்**
**பாலையூற்று / கனேசபுரம் - மூன்றாம்**

இடத்தையும் பெற்றுக் கொண்டது. பங்குபற்றிய அனைவருக்கும், ஊக்கமளித்த பங்குத் தந்தையர்களுக்கும் எமது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**தகவல் : அலை ஓசைக் கலைத் தொடர்பகம்**
**திருகோணமலை.**

## இலங்கை துறவற உயர் தலைவர்கள் பேரவையின் புதிய நிர்வாகக்குழு



இலங்கை துறவற உயர் தலைவர்கள் பேரவையின் பொது அமர்வு கடந்த கார்த்திகை மாதம் 18ம் திகதி தொடக்கம் 21ம் திகதி வரை நீர்கொழும்பு போலவலான தியான இல்லத்தில் நடைபெற்றது. இந்த அமர்வின் முக்கிய நிகழ்வாக புதிய நிர்வாகக் குழு உறுப்பினர்களின் தேர்தல் இடம்பெற்றது. இந்த தெரிவில் நற்கருணைநாதர் துறவற சபையின் மாகாணத்தலைவர் அருட்பணி. டிலான் பெர்னான்டோ SSS பேரவையின் தலைவராகவும், புனித டோமினிக் கன்னியர்கள் சபையின் மாகாணத்தலைவி அருட்சகோதரி சிறிமா ஒப்பநாயக்க OP உப தலைவியாகவும், டிலாசால் துறவற சபையின் மாகாணத்தலைவர் அருட்சகோதரர் கிறிஸ்டி குருஸ் FSC பொருளாளராகவும், திருக்குடும்ப கன்னியர் சபையின் மாகாணத்தலைவி அருட்சகோதரி தியோபின் HF, செபமாலைதாசர் துறவற சபையின் மாகாணத்தலைவர் அருட்பணி. பிரான்சிஸ் ஜெயசீலன் CR, திருச்சிலுவைக் கன்னியர் சபையின் மாகாணத்தலைவி அருட்சகோதரி றொபினா பவுலின் HC ஆகியோர் நிர்வாக உறுப்பினர்களாகவும் தெரிவு செய்யப்பட்டார்கள்.

**உங்கள் உள்ளங்களை உறுதிப்படுத்துங்கள். (யாக் 05: 08)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுயவிழிப்புணர்வுத் தொடர் - 08

# இன்னுமா தயக்கம்

**வசியம் செய்வோமா!**

இறைஇயேசுவில் பிரியமான சகோதர சகோதரிகளே! ஆசையால் ஏற்படும் எதிர்நோக்குகளால் நாம் பல துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம் என்பதை சென்ற இதழில் பார்த்தோம். ஆசைக்கு அடிமையாவதைப் போல பிறருக்கும் பிறருடைய எண்ணங்களுக்கும் அடிமைகளாகிவிடுகிறோம். அவ்வாறான அடிமை நிலைகளும் நம் மகிழ்வை பெருமளவில் பாதிக்கின்றது என்பதை உணர்ந்து அவற்றை எப்படிக் களைவது என்பதையே இந்தக் கட்டுரையில் காண்போம்!

இயேசு தன் வாழ்வில் பல்வேறு விதமான மனிதர்களைச் சந்தித்தார். சிலர் அவருக்கு ஆதரவாக இருந்தார்கள், சிலர் அவருக்கு எதிராக இருந்தார்கள், சிலர் அவரை வேண்டாத ஒரு மனிதராகப் பார்த்தார்கள், சிலர், யூத குலத்தின் எதிரியாகப் பார்த்தார்கள். இவ்வாறு பல்வேறுவிதமான பார்வைகளை அவர்கள் இயேசுவிடம் காட்டினார்கள். ஆனாலும் இயேசு அவர்களுக்கு ஒரே மாதிரியான முகத்தையே காட்டினார். பலர் இயேசுவை தங்கள் வாதத்தில் சிக்கவைக்கவேண்டுமென அவரை அழைத்தார்கள், பலர் அவரது செயல்களில் குற்றம் கண்டுபிடிப்பதற்காகவே காத்திருந்தார்கள். ஆனால், இயேசு எந்த இடத்திலும் உணர்ச்சிவசப்படவில்லை: அனைவரிடமும் அன்பாகப் பழகினார்; யாரிடமும் வேற்றுமை காட்டவில்லை; தன்னை இழிவு படுத்த நினைத்தவர்களையும் மதித்தார். இதுவே இயேசுவின் சிறப்பு மனநிலையாகும்.

இயேசுவின் இந்த மனநிலையையே முதிர்ச்சியடைந்த மனநிலை என்கிறோம். இந்த முதிர்ச்சியை நோக்கியே நாம் பயணிக்க அழைக்கப் பட்டுள்ளோம். இயேசு இறைநிலையையும் மனித நிலையையும் பெற்றிருந்தார். அவர் பாவம் தவிர மற்றனைத்திலும் மனிதரைப் போல் இருந்தார் என்று நாம் பார்க்கின்றோம். எனவே இது அவருக்கு சாத்தியம். நமக்கு இது சாத்தியமாகுமா? என்ற கேள்வி நம் மனதில் எழலாம். இவை நிச்சயமாக நம் ஒவ்வொருவருக்கும் சாத்தியமே என்பதையே இந்தக் கட்டுரையில் காண்போம்.

**வசியம் செய்தல்:**

நம்மைச் சுற்றியுள்ள ஒவ்வொருவரும் தங்களை அறியாமலேயே நம்மை ஒரு குறிப்பிட்ட செயலைச் செய்ய வேண்டுமென தூண்டிக் கொண்டே இருக்கின்றார்கள். சிலர் நல்லன செய்யத் தூண்டுகிறார்கள், சிலர் கெட்டவை செய்யத் தூண்டுகிறார்கள். இதனையே வசியம் செய்தல் என்று நாம் கூறுகின்றோம். இவ்வாறு வசியம் செய்வதற்கு, அதாவது, பிறரை நம் விருப்பப்படி நடக்கச் செய்வதற்கு நாம் அதிகக் கஷ்டப்பட வேண்டும் என நினைப்போம். ஆனால், பல வேளைகளில், இந்த நிகழ்வு எந்தவித சிரமமும் இன்றியே நடந்துவிடுகின்றது. உதாரணமாக, நம் மகிழ்ச்சியை குலைக்கவேண்டும் என்று ஒரு மனிதன் விரும்பினால், அவன் நம் முன்னிலையில் வந்து நாம் கோபப்படும் வகையில் ஏதாவது ஒரு செயலைச் செய்து விட்டால், தானாகவே நாம் அவன் விரும்பியது போலவே சண்டையிட்டு நம் நிம்மதியை நாமே கெடுத்துக் கொள்கின்றோம். ஆனால், அவன் விரும்பியது போல் தான் நாம் நடந்து கொண்டிருக்கின்றோம் என்பதை உணர்ந்து கொள்ளவோ, ஏற்றுக்கொள்ளவோ நம் மனம் விரும்புவதில்லை. எனவே நாம் நம் விருப்பப்படி தான் நடந்து கொண்டிருக்கின்றோம் என்ற மாயைச் சிந்தனையிலேயே நாம் வாழ்ந்து கொண்டிருப்போம். இதையே வசியம் செய்தல் என்றழைக்கின்றோம். இதுபோல பலமுறை நாம் வசியம் செய்யப்பட்டிருப்போம். இது எப்படி நடக்கிறது? இந்த வசியப் பிரச்சனையிலிருந்து நாம் எப்படி நம்மைக் காத்துக் கொள்வது என்று அறிந்து கொள்வது மிக முக்கியமான தேவையாகும்.

**உணர்வுத் தொற்று:**

மனிதர்களின் உணர்வுகள் தொற்றும் பண்பு கொண்டவை. ஒரு மனிதன் மகிழ்ச்சியாக இருந்தால், அவனைச் சுற்றியுள்ள மனிதர்களும் அந்த மகிழ்ச்சியால் உந்தப்பட்டு அவர்களும் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். ஒரு மனிதன் கோபமாக இருந்தால், அவனைப் பார்த்து மற்றவர்களும் கோபப்படுகிறார்கள், கோபப்படமுடியாதவர்கள் பயப்படுகிறார்கள். ஒரு மனிதன் வெறுப்புணர்ச்சியை காட்டும் இடத்தில் அனைவருமே அந்த வெறுப்பை பிரதிபலிக்கிறார்கள். இதுபோல நாம் என்ன உணர்வை பிறருக்குக் காட்டுகிறோமோ அந்த உணர்வே நம்மையும் வந்தடைகின்றது. இவ்வாறு மனிதர்கள் பிறரால் வசப்படுத்தப்படுகிறார்கள் என்றால் அது மிகையாகாது. இவ்வாறு காற்றில் அடித்துச்செல் லப்படும் புதரைப் போல பிறரது உணர்வுகளால் அலைக்கழிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறோம் என்றால் நம்முடைய நிலைப்பாட்டையும் நம் இயல்பையும் எவ்வாறு செயல்படுத்துவது? நம்மைச் சுற்றியுள்ள மனிதர்கள் தான் நம் செயல்பாட்டைத் தீர்மானிக்கின்றார்கள் என்றால், இறைவன் நமக்குக் கொடுத்த ஆறாம் அறிவின் வேலை தான் என்ன?

**இயேசுவின் எடுத்துக்காட்டு:**

ஒருமுறை ஒரு பரிசேயன் இயேசுவை விருந்துக்கு அழைக்கின்றான். அவனுடைய நோக்கம், இயேசுவுக்கு விருந்து கொடுப்பதல்ல, மாறாக அவரை அவமானப்படுத்த வேண்டும் என்பதே. எனவே அவரை அழைத்து அவருக்கு கொடுக்கவேண்டிய எந்த மரியாதையையும் கொடுக்காமல் அவரை அவமானப்படுத்துகிறான். அவர் வீட்டுக்குள் நுழைந்த போது யூதரின் முறைப்படி அவருக்கு செய்ய வேண்டிய மரியாதைகளான, பாதம் கழுவத் தண்ணீர் கொடுத்தல், தலைக்கு எண்ணை தைலம் இடுதல், கட்டித் தழுவுதல் போன்ற எந்த மரியாதையையும் அவருக்கு செலுத்தவில்லை. இதனால் மற்றவர்கள் இவரைப் பார்த்து எள்ளிநகையாடிக் கொண்டிருக்கின்றார்கள். அப்போது, அங்கிருந்தவர்கள் இந்த அவமானத்திற்கு இயேசு பதிலடி கொடுப்பார் என்று எதிர்பார்த்திருப்பார்கள். ஆனால், இயேசு இந்த அவமானங்களை ஒரு பொருட்டாகவே எடுத்துக் கொள்ளவில்லை. மாறாக, அந்தப் பரிசேயனோடு சகஜமாக உரையாடிக் கொண்டிருக்கின்றார். அவன் கேட்கும் கேள்விகளுக்கு எந்தவிதத் தயக்கமும் காட்டாமல் பொறுமையாக பதிலளித்துக்கொண்டிருக்கின்றார். அவருடைய அவமானத்தைப் பார்த்து, மக்கள் பாவி என்று ஒதுக்கி வைத்த ஒரு பெண் கொதிக்கின்றாள், வேதனைப்படுகின்றாள். இயேசு சீமோன் என்னும் பரிசேயன் வீட்டுக்கு செல்கின்றார் என்றவுடனே, அவள் அங்கு என்ன நடக்கும் என்பதை யூகித்துக் கொள்கின்றாள். என் ஆண்டவரை அவர்கள் அவமானப்படுத்துகின்றார்களே என்று நினைக்கும் போது அவளது உள்ளம் குமுறுகின்றது. அவளால் அதைத் தாங்கிக் கொள்ள இயலாமல் அழுகின்றாள். வேகமாக ஓடி வந்து இயேசுவுக்கு கொடுக்காமல் விடுபட்ட அனைத்து மரியாதைகளையும் இரண்டு மடங்காக சேர்த்துக்கொடுக்கிறாள். எனவேதான் அவளது வருகையைப் பார்த்து பரிசேயர்கள் கொதிக்கின்றார்கள். அவளைப் பாவியான பெண் என்று ஒதுக்குகிறார்கள். ஆனால் இயேசு தன் செயல்களில் மிகவும் தெளிவானவராகவும் உணர்ச்சிவசப்படாதவராகவும் இருந்தார்: அந்த இடத்தில் அவர்கள் செய்த பிழைகளைச் சுட்டிக் காட்டி அவர்களையும் நல் வழிப்படுத்தவே முயற்சிக்கின்றார். இயேசுவுக்கு நிகழ்ந்த அவமானத்தை நினைத்து அந்தப் பெண் கொதிக்கின்றாள். ஆனால், இயேசு கோபப்படவில்லை, கொதிக்கவில்லை, அமைதியாக தன் செயல்களை தான் நினைத்தபடி செய்துகொண்டே இருக்கின்றார். எனவே அவரை பரிசேயர்களும் சரி மற்ற ஆட்சியாளர்களும் சரி, அவரை தாங்கள் விரும்பியபடி செயல்படுத்த முடியவில்லை. எனவே தான் எத்தகைய எதிர்ப்புகள் இருந்த சூழலிலும் அவரால் தான் நினைத்த விழுமியங்களை தெளிவாகவும் உறுதியாகவும் மக்களுக்குப் போதிக்க முடிந்தது. அவர் சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்த போதும் கூட அவரை வெறுப்பேற்றி தாங்கள் நினைத்த காரியத்தை அவரைச் செய்ய வைக்க முயன்றனர் அவரது எதிரிகள். நீ மெசியா என்றால் உன்னையே நீ காப்பாற்றிக் கொள், அப்போது நாங்கள் உன்னை மெசியா என்று நம்புவோம், என்று பல்வேறுவிதமாக அவரைத் தூண்டிப் பார்த்தார்கள். ஆனால், இயேசு தன்னிலை மாறாதவராகவே இறுதி வரை இருந்தார். பதில் கொடுக்கக் கூடியவர்களுக்குப் பதில் கொடுத்தார், மற்றவர்களுக்கு மௌனம் காத்தார். மற்றவர்களுக்காக தன்னை மாற்றிக் கொள்ள வேண்டும் என அவர் விரும்பவில்லை.

**தன்னிலை அறிந்து கொள்வோம்:**

அன்பார்ந்தவர்களே! எல்லா மனிதர்களும் இயல்பிலே தன்னை அறிந்துகொள்ள வேண்டும் என்ற ஆசையில் தான் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். எனவே தான் தன்னைப் பற்றி பிறர் பேசிக் கொண்டிருக்கும் போது மிக ஆர்வத்தோடு உற்று கவனிக்கின்றோம். அவர்கள் நம்மைப் பற்றி நல்லனவாக மட்டுமே சொல்லவேண்டும் என்பது நம் 'நான்' என்னும் எண்ணத்தின் வெளிப்பாடாகும். இயேசு தன்னிலை அறிந்தவராக இருந்தார். அதனால் அவர் பிறருடைய பாராட்டுக்களையோ பிறருடைய வசவுமொழிகளையோ மிக முக்கியமானதொன்றாக எடுத்துக் கொள்ளவில்லை. அதாவது, தன்னைப் பற்றிய அறிவை அவர் பிறரிடம் தேடவில்லை. ஒரு மனிதனைப் பற்றிய அறிவு அவனைத் தவிர வேறு யாருக்கும் இருக்கப் போவதில்லை. எனவே அவர் தன்னைப் பற்றி தன்னில் மட்டும் தேடினார், அதையே நம்பினார்.

இன்று நாம் நம்மை பிறர் கட்டுப்படுத்த விட்டுவிடுகிறோம் என்றால் அதற்குக் காரணம், நம்மைப் பற்றிய அறிவை பிறரிடம் தேடிக் கொண்டிருக்கின்றோம். நான் எப்படிப்பட்டவன்: நல்லவனா, கெட்டவனா, திறமை மிகுந்தவனா, அறிவாளியா, சாதித்திருக்கின்றேனா? என்ற பல கேள்விகளுக்கான விடைகளை பிறரிடமிருந்து எதிர்பார்த்துக் காத்திருக்கின்றோமே தவிர நம்மில் இந்த கேள்விகளை கேட்க மறந்து விடுகின்றோம். இதனால், இந்தக் கேள்விகளுக்கு பிறர் நல்ல பதிலைத் தரவேண்டும் என்ற நிர்ப்பந்தமே நம்மை பிறருக்கு அடிமையாக்கிவிடுகின்றது.

இந்த உலகில் ஒரு மனிதன் படிக்கவேண்டிய முக்கியமான புத்தகம், அவனது மனம். அந்தப் புத்தகமே உலகிலேயே மிகச் சிறந்த புத்தகம், மிக உன்னதமான அறிவுக்களஞ்சியம். ஒவ்வொருவரும் தங்கள் மனதை அறிந்து கொள்ள வேண்டும். அதிலிருந்து நமக்குத் தேவையான அனைத்து பதில்களும் கிடைத்துவிடும். இதுவே இயேசுவைப் போன்ற முதிர்ச்சியடைந்த மனிதராவதற்கான பாதையாகும்.

இதனைப் பற்றிய மேலதிகத் தகவல்களுடன் மீண்டும் உங்களைச் சந்திக்கும் வரை உங்களிடமிருந்து நன்றி கூறி விடைபெறுகிறோம். வணக்கம்!

**இறையாசீருடன் அருட்பணி அலெக்ஸ், க. ச**

## தைப் பொங்கல் வாழ்த்துக்கள்



வியர்வையை மண்ணுக்கு
உரமாக்கி...
வெயில் மழை பாராமல்
பாடுபட்டு...
விளைத்தெடுத்த நெல்மணிகளை
புதுப்பானையில் போட்டு
பொங்கலிட்டு ...
பொங்கலோ பொங்கலென்று
அனைவரும் சேர்ந்து கூறிடுவோம்...

உழவனுக்கு ஒரு திருநாளாம்
உலகம் போற்றும் நன்னாளாம்
சூரியனை வணங்கி விட்டு
சுருக்குப் பையில் காசு எடுத்து
தித்திக்கும் கரும்பு வாங்கி
தெவிட்டத் தின்னும் திருநாளாம்

வருகிறது புதுப் பொங்கல்
வளம் தரும் தைப் பொங்கல்
காளைகள் சீறிப்பாய
காத்துக் கிடக்கு வாடி வாசல்
அரிசி மாவில் கோலமிட்டு
ஜொலிக்கிறது வீடு வாசல்

சந்தோசமும் செல்வமும்
நம் வாழ்வில் பொங்கி வர
சாதி மத பேதமின்றி
சங்கடங்கள் ஏதுமின்றி
கை கூப்பி வரவேற்போம்
தை பொங்கல் திருநாளை

**நன்றி - இணையம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படித்ததில் பிடித்தது

## பாடம்




விறகு வெட்டச் சென்றார் ஒரு விறகுவெட்டி.
நடுக்காட்டில் தன் விதியை நொந்துகொண்டே
வேலை செய்தார்.
கடவுளையும் விமர்சித்தார்.
கால் ஊனமுற்ற நரியை அங்கு பார்த்தார்.
பரிதாபப்பட்டார்:
"பாவம் அந்த நரி.
எப்படித்தான் கடவுள்
இதைக் காப்பாற்றுகிறாரோ?"
அப்போது புலி ஒன்று மானைக் கவ்வியபடி வந்தது.
தான் தின்றது போக மிகுதியைப் போட்டு விட்டுப் போனது.
அதைத் தின்று நன்றாகப் பசியாறியது நரி.
விழிப்புணர்வு பெற்றார் விறகு வெட்டி!
"ஐந்தறிவு படைத்த ஓர் ஊனமுற்ற நரிக்கே
கடவுள் இப்படிச் உணவிட்டுக் காப்பாற்றுகிறார் என்றால்...
ஆறறிவு படைத்த எனக்கு உணவிட மாட்டாரா...?"
முடிவுக்கு வந்தார்.
கோடரியைத் தூக்கிப் போட்டார்.
உணவுக்காகக் காத்திருந்தார்.
மதியமானது, மாலையானது, இரவுமானது.
அடுத்த நாளும் வந்து போனது.
உணவு வருவதாகத் தெரியவில்லை.
ஒரு நாளானது, இரு நாளானது, ஒரு வாரமுமானது.
கடவுள் தரும் உணவுக்காகக் காத்திருந்தவர்
துரும்பாய் இளைத்துப் போனார்.
கடவுளிடம் கோபமாய் முறையிட்டார்:
"கடவுளே...!
உன்னை நம்பிய என்னை இப்படி பட்டினி போடலாமா?
நீ உண்விட்ட ஊனமுற்ற நரியிடமிருந்துதானே பாடம் கற்றேன்...!"
கடவுள் சொன்னார்:
"மனிதனே...!
நீ பாடம் கற்றுக்கொள்ள வேண்டியது;
நரியிடமிருந்து அல்ல புலியிடமிருந்து."

**பெரும்பாலான வாழ்க்கைப் பாடங்கள்**
**தவறாகவே புரிந்துகொள்ளப்படுகின்றன!**

## தை 2020
## மறைமாவட்ட நிகழ்வுகள்

| | | |
|---|---|---|
| 01.01.2020 | புதன்கிழமை | : கடவுளின் தாய் புனித மரியா பெருவிழா. |
| 03.01.2020 | வெள்ளிக்கிழமை | : இயேசுவின் தூய்மைமிகு பெயர் - நினைவு. |
| 04.01.2020 | சனிக்கிழமை | : வளர்ந்தோர் விவிலியக் கல்வி. |
| 05.01.2020 | ஞாயிற்றுக்கிழமை | : ஆண்டவருடைய திருக்காட்சி - பெருவிழா. |
| 07.01.2020 | செவ்வாய்கிழமை | : குருக்களுக்கான மாதாந்தத் தியானம். |
| 10.01.2020 | வெள்ளிக்கிழமை | : திருமண முன்னாயத்தக் கருத்தரங்கு. |
| 11.01.2020 | சனிக்கிழமை | : திருமண முன்னாயத்தக் கருத்தரங்கு. |
| 12.01.2020 | ஞாயிற்றுக்கிழமை | : ஆண்டவருடைய திருமுழுக்கு - விழா |
| | | : கத். இளைஞர் ஒன்றியம்: திருமலை மறைக்கோட்டத்திற்கான கூட்டம். |
| 16.01.2020 | வியாழக்கிழமை | : இலங்கையின் திருத்தூதரான புனித யோசேவ் வாஸ் - பெருவிழா. |
| | | : வேதத்தீவு (மூதூர்: புனித யோசேவ் வாஸ் ஆலய வருடாந்தத் திருவிழா. |
| 18.01.2020 | சனிக்கிழமை | : வளர்ந்தோர் விவிலியக் கல்வி. |
| | | : PMS - ஊக்குவிப்பாளர்களின் கூட்டம். |
| 19.01.2020 | ஞாயிற்றுக்கிழமை | : திருப்பாலத்துவ சபை ஞாயிறு. |
| | | : மனையாவெளி (பேராலயம்) புனித செபஸ்தியார் ஆலய வருடாந்தத் திருவிழா. |
| | | : PMS - பங்குத் தரிசிப்பு: குவாடலுப்பே அன்னை ஆலயம். |
| 25.01.2020ச | னிக்கிழமை | : திருத்தூதரான புனித பவுலின் மனமாற்றம் - விழா. |
| | | : மறைக்கல்வி ஆணைக்குழு மறையாசிரியர் கருத்தரங்கு. |
| | | : கிறிஸ்தவ ஒன்றிப்பு வார இறுதிநாள் - செப ஆராதனை. |
| 26.01.2020 | ஞாயிற்றுக்கிழமை | : பொதுக்காலம் 3-ஆம் வாரம்: இறைவார்த்தை ஞாயிறு. |
| | | : தேவாநகர் (அலஸ்தோட்டம்-புளியங்குளம்) குழந்தை இயேசு ஆலய வருடாந்தத் திருவிழா. |
| | | : அன்பியம் - பங்குத் தரிசிப்பு. |
| | | : கத். இளைஞர் ஒன்றியம் - நிலாவெளி மறைக்கோட்ட உத்தியோகஸ்தர் தெரிவு. |

# பதிப்பாசிரியர் பகிர்வு



**அருட்பணியாளர் T. கிங்ஸ்லி றொபட்**

இறை இயேசுவுக்குள் மிகவும் பிரியமானவர்களே!
ஜான்ஸ் கடவுளுக்குத் தலைகள் இரண்டு:
ஒன்று கடந்த ஆண்டைப் பார்த்தபடி இருக்கும்.
மற்றொரு தலை, புதிய ஆண்டை நோக்கியபடி இருக்கும்.

அந்த ஜான்ஸ் என்னும் உரோமைக் கடவுளை முன்னிறுத்தி வரும் ஜனவரி மாதத்தோடு 2020-ஆம் புத்தாண்டை வரவேற்கின்றோம்.

புது ஒளியினைப் பெற்று புதிய ஆண்டில் பாதமெடுத்து வைக்கும் பாக்கியம் தாரும் பரமனே! என்ற வேண்டுதலோடு இப்புத்தாண்டை வரவேற்போம்.

நாங்கள் புதியவர்களாக மாறாதவரை, ஆண்டடினைப் புதியதாக அறிவிப்பதிலே அர்த்தமில்லை! காலண்டர்களை மாற்றுவதில் இல்லை: காரியங்களை முன்னேற்றுவதில்தான் காலங்கள் கனிகின்றன என கருத்தாய் அறிந்து வாழ வாழ்த்துக்கள்". (ஆதாரம்: ஜெரி - இன்றுமுதல்).

திருகோணமலை மறைமாவட்டத் திருஅவையாக நற்செய்தி மீள்-அறிவிப்பு ஆண்டு என்ற கருப்பொருளை சிந்தித்து செயல்படுத்த முனைப்போடு 2020-ஆம் ஆண்டை நாம் ஆரம்பிக்கின்றோம்.

திருத்தந்தை புனித 2-ஆம் ஜோன் போலின் (John Paul II) மீட்பரின் பணி எனும் சுற்றுமடலில் 33-ஆம் எண் பின்வருமாறு குறிப்பிடுகின்றது:

.நற்செய்திப் பணியைப் பொறுத்தவரையில் இன்றைய உலகில் மூவகைப்பட்ட சூழமைவுகளைப் பார்க்கிறோம்.
முதல் சூழமைவு, கிறிஸ்துவையும் அவரது நற்செய்தியையும் அறியாத மக்களையும் சமுதாய கலாச்சாரப் பின்னணியையும் கொண்டது....

இரண்டாவதாக, போதிய உறுதியான திருமறை அமைப்புகளைக் கொண்ட கிறிஸ்தவ சமூகங்களைக் கொண்ட, நற்செய்திக்குச் சான்று பகர்கின்ற மக்களைக் உள்ளடக்கிய பின்னணியைக் கொண்டது...

மூன்றாவதாக, மேற்கூறிய இரண்டுக்கும் இடையில் இன்னொரு சூழமைவுண்டு. இது காணப்படுவது முக்கியமாக நீண்ட கிறிஸ்தவ பாரம்பரியம் கொண்ட நாடுகளிடையே. இங்கெல்லாம் திருமுழுக்கு (ஞானஸ்நானம்) பெற்ற அங்கத்தினர் என்னும் எண்ணமேயன்றி வாழ்கின்றனர். அவர்களது வாழ்வு கிறிஸ்துவினின்றும் அவரது நற்செய்தியினின்றும் வெகு தொலைவில் உள்ளது. இந்நிலையில் அவர்களுக்கும் **புதியதொரு நற்செய்திப் போதனை அல்லது இரண்டாம் நற்செய்திப் போதனை தேவைப்படுகிறது.**' (காண். மீட்பரின் பணி, எண். 33).

மேற்கூறப்பட்ட மூன்றாவது சூழமைவை இலக்காகக் கொண்டே நற்செய்தி மீள்-அறிவிப்பு ஆண்டு என்ற கருப்பொருள் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது. இந்த ஆண்டிலே நமது நம்பிக்கை வாழ்வை உரசிப் பார்த்து சீர்செய்ய, அதனை ஆழப்படுத்த அரியதோர் வாய்ப்பு எமக்குக் கொடுக்கப்படுகிறது.

'இறைநம்பிக்கையின் இரு வெளிப்பாடுகள் வழிபாடும் வாழ்க்கை முறையும் ஆகும். வழிபாடு என்பது பலிகள், காணிக்கைகள், மன்றாட்டுகள், கொண்டாட்டங்கள், பவனிகள், திருப்பயணங்கள் என்பவைகள் வழியாகச் செயல்படுகிறது. சமயத் திருநூல்கள், நம்பிக்கை அறிக்கைகள், சமயச் சின்னங்கள், சடங்குகள், கோவில்கள், திருத்தலங்கள் என்பவையும் வழிபாட்டில் முக்கிய இடம் பெறுகின்றன. ஆனால் உண்மையான வழிபாடு இவற்றோடு முடிந்துவிடுவது இல்லை. மாறாக, வழிபாடு என்னும் சொல்லின் பொருள் வழியில் படுதல்+என்பதே. அதாவது, நாம் நம்பும் கடவுளை அதிகமதிகமாக அறிந்து, அன்பு செய்து, அவரது திருவுளப்படி செயல்படுவதே உண்மையான வழிபாடு. இறைவனின் உள்ளத்தையும், உணர்வுகளையும், எண்ணங்களையும், எதிர்நோக்குகளையும், பண்புகளையும், பணிகளையும் நமதாக்கி வாழ்வதே உண்மையான வழிபாடு. உண்மையாய் வழிபடுவோர் தந்தையை அவரது இயல்புக்கு ஏற்ப உள்ளத்தில் வழிபடுவர் (யோவா 4:23) என இதையே யோவான் நற்செய்தியும் எடுத்துரைக்கிறது. இத்தகைய வாழ்வுசார் வழிபாடே முழுமையான இறை நம்பிக்கையும் ஆகும்.' (காண். அருள்முனைவர் தே. அல்போன்சு, கத்தோலிக்க இறைநம்பிக்கை வேர்கள்.).

மேற்கூறப்பட்டுள்ள முன்மொழிவோடு, நமது நம்பிக்கை வாழ்வை மீண்டும் மறுமலர்ச்சிப் பாதையில் முன்னெடுத்துச் செல்ல நமக்கு அறைகூவல் விடுக்கப்படுகிறது. எசாயா இறைவாக்கினரின் கூற்றுக்கிணங்க, 'தளர்ந்து போன கைகளைத் திடப்படுத்துங்கள்: தள்ளாடும் முழங்கால்களை உறுதிப்படுத்துங்கள். உள்ளத்தில் உறுதியற்றவர்களை நோக்கி, திடன் கொள்ளுங்கள், அஞ்சாதிருங்கள்" (35:3-4) என்ற பரிவுள்ள இறைவனின் வார்த்தைக்குச் செயல்வடிவம் கொடுக்க முன்வருவோம். நம்பிக்கையின் சுடர்களாய் ஒளிவீசி, நற்சான்று பகர்வோம். உயிர்த்த ஆண்டவரை அனுபவ ரீதியாகச் சந்தித்து, நம்பிக்கையை பலப்படுத்தி, இனி வாழ்வது நான் அல்ல, கிறிஸ்துவே என்னுள் வாழ்கிறார் (கலா 2:20) என்ற புனித பவுல் அடிகளாரின் வரிகளை எமதாக்கிக்கொண்டு வாழ்வாங்கு வாழ வாழ்த்துக்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறப்பு நிதி சேகரிப்பு பங்குகளின் பங்களிப்பு

| | திருப்பாலத்துவ சபை | திருத்தந்தையின் தினம் | சுதேச குருக்கள், துறவியர் தினம் | மறைபரப்பு ஞாயிறு | தேவ அழைத்தல் தினம் |
|---|---|---|---|---|---|
| பேராலயப் பங்கு | 54,763.00 | 18,400.00 | 46,300.00 | 40,315.00 | 22,233.00 |
| குவாடலூப்பே பங்கு | 18,000.00 | 11,460.00 | 17,130.00 | 20,010.00 | 2,560.00 |
| உவர்மலைப் பங்கு | 20,600.00 | 24,126.00 | 25,070.00 | 20,340.00 | 10,100.00 |
| பாலையூற்றுப் பங்கு | 35,250.00 | 13,870.00 | 25,360.00 | 28,060.00 | 5,620.00 |
| செல்வநாயகபுரப் பங்கு | 2,860.00 | 3,000.00 | 2,000.00 | 3,000.00 | 1,000.00 |
| அலஸ்தோட்டம்-புளியங்குளப் பங்கு | 20,210.00 | 6,611.00 | 18,270.00 | 11,496.00 | 3,350.00 |
| சாம்பல்தீவுப் பங்கு | 11,570.00 | 15,040.00 | 15,040.00 | 12,060.00 | 12,230.00 |
| கன்னியாப் பங்கு | 3,760.00 | .00 | 2,000.00 | 900.00 | 2,000.00 |
| நிலைவெளிப் பங்கு | 12,000.00 | 6,000.00 | 25,070.00 | 25,666.00 | 5,000.00 |
| ஆண்டாங்குளப் பங்கு | 4,620.00 | 1,580.00 | 1,580.00 | 5,050.00 | 2,296.00 |
| கந்தளாய்ப் பங்கு | 7,500.00 | 2,360.00 | 3,000.00 | 10,660.00 | 7,840.00 |
| தம்பலகாமம் பங்கு | 2,700.00 | 1,063.00 | 925.00 | 1,430.00 | 1,700.00 |
| குச்சவெளிப் பங்கு | 2,500.00 | 6,210.00 | 8,030.00 | 5,685.00 | 5,550.00 |
| சீனன்குடாப் பங்கு | 3,200.00 | 1,500.00 | 1,000.00 | 3,500.00 | 1,500.00 |
| மூதூர்ப் பங்கு | 10,090.0 | 11,260.00 | 6,700.00 | 12,270.00 | 6,200.00 |
| இருதயபுரப் பங்கு | 15,160.00 | 5,300.00 | 12,351.00 | 20,000.00 | 3,350.00 |
| புனித சூசையப்பர் கல்லூரி | | | | 4,440.00 | |
| புனித சூசையப்பர் முதியோர் இல்லம் | | | | 4,000.00 | |
| | | | | | |
| மொத்தம் | 224,783.00 | 124,790.00 | 209,826.00 | 228,882.00 | 92,529.00 |

அருட்பணி. X.I. றஜீவ
இயக்குனர்,
திருத்தந்தையின் மறைபரப்பு சபைகள்,
திருகோணமலை மறைமாவட்டம்

சென்ற மாதத் தொடர்ச்சி........

## நீதிமன்றங்களும் மத்திய சபைகளும்



**கட்டுப்பாடான உணர்வுகள்:-** மத்தியஸ்தரும் தமது உணர்வுகளைக் கட்டுப்பாட்டுடன் இருத்தல் அவசியம்.

**ஏற்றுக்கொள்ளல்:-** திறத்தவரதுகருத்துக்களையும் பெறுமானங்களையும் அடையாளம் கண்டு ஏற்றுக் கொள்வதாகும். அத்துடன் அவர்களது பலம், பலவீனம், சாதனை, பாதகமான உணர்வுகள், அவர்களது நடத்தைகள் பற்றியும் அதேசமயம் தனிப்பட்ட கௌரவத்தையும், பெறுமதிகளையும் உணர்ந்து செயற்படல் ஓர் அம்சமாகும். மத்தியஸ்தர் அவர்கள் மட்டில் நம்பகத் தன்மையை நிலைநாட்டுவதோடு மற்ற சிறந்தவரை அச்சுறுத்தியோ கட்டாயப்படுத்தியோ வரும் எந்த முயற்சியையும் தடுப்பது அவர்களது கடமையாகும். அதிகார முறையான அல்லது தந்திரமான முறையில் நடைபெறக்கூடாது.

**தீர்ப்புக் கூறாத மனப்பாங்கு :-** ஒருவரை ஒருவர் குற்றம் கூறாமல் குற்றங்களை யார் மீதும் சுமத்தாமலும் அவர்கள் மீது குற்றத்தையோ குற்றமற்ற தன்மையையோ தீர்ப்போ வழங்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

**சுயநிர்ணயம்:-** திறத்தவர்கள் தாம் சுயமாக தீர்வுகளை எடுப்பதற்கு உதவுவதாய் இருக்க வேண்டும்.

**இரகசியம் பேணல்:-** பிணக்குகள் விடயமான இருசாராரிடம் பெறும் தகவல்கள் பற்றி வெளியில் உள்ளவரிடம் கூறாமல் இரகசியம் பேணல் அவசியம்.

**மத்தியஸ்தக் கோட்பாடுகள்:-** ஒரு மத்தியஸ்த சபையின் செயற்திறனின் வெற்றியும் தோல்வியும் நம்பிக்கையுடன் சரியாக பிரயோகிகப்பதிலேயே தங்கியுள்ளது. இது அவர்களது உயிர்நாடியாக அமைகின்றது.

**சுயநிர்ணயம்:-** தானே பொறுப்பை ஏற்றல் திறந்தவர்களே தீர்மானங்களை ஏற்றுக்கொள்ளல். அவர்கள் சார்பில் கூறப்படும் தீர்மானங்களுக்குத் தைரியம் கொடுத்து மதிப்பளித்தல்

**ஒத்துழைப்பு:-** எல்லோரது நோக்கம் ஒன்றாக இருந்து செயலாற்றினால் திறந்தவர்கள் ஒருவரை ஒருவர் புரிந்து தாமாகவே மோதலை தவிர்த்து கூட்டாக எடுக்கும் தீர்மானத்திற்கு பூரண ஒத்துழைப்பினை வழங்கி உதவி புரிதல்

**மதிப்பளித்தல்:-** திறத்தவர் தனி நபரது தனித்துவத்தை ஏற்றுக் கொண்டு அவர்கள் கூறும் கருத்துக்களுக்கு மதிப்பளித்தல் மற்றும் தீர்மானம் எடுக்காத திறந்த மனதுடையவராக இருத்தல் அவசியம்.

**நீதி:-** திறத்தவர்கள் நீதி நியாய பூர்வ தீர்வை எடுக்க அவர்களுக்கு பக்கச் சார்பற்றவராக இருப்பதோடு மட்டுமல்லாமல் உள்ளடக்கத்தில் தலையிடாமல் இருத்தல் அவசியம்.

**அங்கீகாரம்:-** மற்றவரது கருத்துக்களை நன்கு புரிந்து அதன் தேவைகளை வெளிக்காட்டல் அதாவது கூடிய அக்கறையுள்ளவர்களாக என்ன நடந்தது? எப்படி நடந்தது என புரிந்துணர்வை ஏற்படுத்தி செயற்படுவர்.

**வலுப்படுத்தல்:-** திறத்தவர்களது கருத்தை தெளிவாகக் கூறவும் பிணக்கைத் தீர்வுக்குக் கொண்டுவரவும் அவர்களுக்கு நல்ல தைரியத்தையும், அவர்களுக்கு சாத்தியமான மாற்றுவழிகளையும் உணர்த்துவதற்கான நல்ல சிந்தனைகளை உபாயமாக மத்தியஸ்தர் வழங்கி செயற்படுவார்.

**இசைந்து கொடுத்தல்:-** திறத்தவர்களின் தேவையை ஒட்டிய மாற்றத்தினை முன்னிட்டு வித்தியாசமான கண்ணோட்டங்களிலும் மாற்றுத்தீர்வுகளிலும் கவனத்தைச் செலுத்தி நல்ல செயல்வழிகளை உபயோகிப்பது.

ஒரு சிறந்த மத்தியஸ்தருக்கு இதயம், மனம் மற்றும் கைகள் ஆகியவை மிகவும் முக்கிய பங்காக அமைகின்றது.

**இதயம்** - சிறந்த பண்புகளையுடையவராகவும் பிணக்கு தொடர்பாக நல்ல மனோபலம் கொண்டவராகவும் இருத்தல்.

**மனம்** - தரத்தினரது முரண்பாடு தொடர்பாகவும் , அவர்களது எண்ணக்கரு தொடர்பாகவும், நலன் தொடர்பாகவும்,எதிர்கால தீர்வு தொடர்பாகவும் சிந்திக்கும் ஆற்றல் உள்ளவராகவும் இருத்தல்.

**கைகள்** - பிரச்சனைத் தீர்வில் உதவி செய்யக் கூடிய திறனும் நடைமுறையும் கொண்ட சிறந்த பண்புகளை வளர்த்துக் கொள்ளவேண்டும்.

**உதாரணமாக ஒரு கதை –**

கந்தசாமி ஒரு மாலைப்பொழுது தன் வீட்டிற்கு அருகில் ஓரிரு நாட்களுக்கு முன் வாடகைக்கு குடிவந்த ஒரு பிரபல சட்டத்தரணி அவர்களிடம் வந்து ஐயா! நான் ஆசையாக வளர்த்த விடைப்பருவக் கோழியை ஒரு நாய் கடித்துக்கொன்றது. எனக்கு நஷ்ட ஈடு எடுத்து தாருங்கள். நான் ஆசையாக வளர்த்த கோழி என்றார். சட்டத்தரணியும் அப்படியே உமக்கு எவ்வளவு நஷ்டப்பணம் எடுத்து தரவேண்டும் என்றார். கந்தசாமியும் ஐயா! எனக்கு ரூபா 250 தாருங்கள் என்றான். சட்டத்தரணியும் யார் மேல் புகார் பண்ணுகிறீர் நாய்க்கு உரிமையாளர் யார், பெயரென்ன என்றார். கந்தசாமியும் அது உங்களது நாய் என்றார். சட்டத்தரணியும் அப்படியே அதற்கான பணத்தைத் தருகிறேன். அதற்கு முன் என்னிடம் ஆலோசனைகளை கேட்கும் அனைவரிடமும் ஆலோசனை Fees ஆக ரூபா 300 நீர் உமக்குக் கொடுக்கவிருக்கும் பணம் ரூபா 250 ஐக் கழித்து மிகுதி ரூபா 50 ஐத் தாரும் என்றார். கந்தசாமிக்கு தூக்கிவாரிப்போட்டது. இதுதான் நீதி வழங்கும் இடங்களில் நடைபெறும் நிகழ்வுகள் மத்தியஸ்த சபையில் தீர்ப்பு இல்லாமல் இருவரும் இணைந்து எடுக்கும் தீர்வாகும்.

தொடரும்............

**சாமஸ்ரீ தேசமானிய சந்தியாகுப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை**
**அகில இலங்கை சமாதான நீதவானும் மத்தியஸ்தரும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்து வாழ்கின்றார் - திருத்தூது ஊக்கவுரை திருத்தந்தை பிரான்சிஸ்

அருட்பணி அ.அ. நவரெத்தினம்
சிரேஸ்ட விரிவுரையாளர்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

சென்ற இதழ் தொடர்ச்சி..................

## அலகு 4: அனைத்து இளையோருக்குமான மாபெரும் செய்தி

இளையோர்கள் அறிந்திருக்க வேண்டிய நம்பிக்கையின் கோரிக்கைகள் குறித்து திருத்தந்தை அவர்கள் பேசுகின்றார்.

1. கடவுள் உங்களை அன்பு செய்கிறார்: இது கடவுள் முன்னிலையில் இளையோரின் தகுதி, சிறப்பு, முக்கியத்துவம் குறித்து விளக்குகின்றது.
2. கிறிஸ்து உங்களைக் காக்கின்றார்: எந்தவொரு கருத்தியலும் இளையோரைக் காக்க முடியாது. இளையோர்மீது கொண்ட அன்பின் காரணமாக கடவுள் அவர்களைக் காக்கின்றார். அவர்களில் யாரும் விற்பனைக்குரியவர்கள் அல்ல.
3. கிறிஸ்து வாழ்கின்றார்: கிறிஸ்து இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த தூரத்திலிருக்கின்ற உருவமல்ல மாறாக அவர் இன்றைய இளையோரின் வாழ்வில் தாக்கத்தை ஏற்படுத்தும், உயிருள்ள பிரசன்னமாக இன்றும் உள்ளார்.
4. ஆவியானவர் வாழ்வளிக்கின்றார்: மீட்பின் நம்பிக்கையினை உயிருடன் வைக்கக்கூடிய ஒரே ஒருவராகிய தூய ஆவியாருக்கு இளையோர் தங்களையே திறந்தளிக்க வேண்டும்.

## அலகு 5: இளையோரின் பாதை

நற்செய்தியின் ஒளியில் இளையோர் தங்கள் வாழ்நாட்களை எப்படி வாழ வேண்டுமென்பதற்கான பகுப்பாயினை திருத்தந்தை தருகின்றார். இளமைப்பருவம் என்பது கனவுகளுடனும், தீர்மானங்களுடனும் கூடிய காலமாகும், அங்கே இளையோர் அவர்களது அடிப்படைகளிலிருந்து (வேர்கள்) அவர்களை அறுத்துக்கொள்ளாமல் தொடரவேண்டுமென்கிற அறிவுறுத்தல் தரப்படுகின்றது. நிச்சயமாக பல வேளைகளில் முறைப்பாடுகள், விட்டுவிடுதல், பதட்டம் போன்ற சோதனைகள் ஏற்படக்கூடும். அத்தகைய சூழ்நிலைகளை எதிர்கொள்ள தயார் நிலையிலுள்ள விடைகளை எதிர்பார்க்காமலிருக்க பொறுமையினை தங்கள் வாழ்வில் பயிற்சி செய்ய வேண்டும். அவர்கள் புதிதாக ஒன்றைச் செய்வதற்கோ அல்லது பிழைகளை விடுவதற்கோ பயப்படக்கூடாது.

இளையோர் தங்களது இளமைப்பருவத்தினை வாழ்வதற்காக இயேசுவில் இடைவிடாத நட்பினைப் பேணுவதுடன், அவரது நாளாந்த ஆசிரையும் பெறவேண்டும். இயேசுவுடன் நட்பினைப் பேணுவதற்கான திறவுகோல் இறைவேண்டலாகும். இவ் நட்பானது இளையோர் முதிர்ச்சி உற்றவர்களாய் வளரவும், ஆண்டவருக்குள் அடித்தளமிடப்படவும், அவரோடு என்றும் இணைப்பில் இருக்கவும் உதவுகின்றது. முதுமையில் வளர்வதென்பது இளமையின் மகிழ்ச்சியான தருணங்களை எண்ணுவதுடன் அவற்றை பாதுகாப்பதிலும், மறுபக்கத்தில் நன்மை தராத விடயங்களை புனிதப்படுத்துவதிலும், அத்துடன் கடவுளிடமிருந்து புதிய கொடைகளைப் பெற்று தேவையானவற்றை வளர்த்துக்கொள்ளவும் வேண்டும் என்பதாகும். இதற்காக இளையோர் உண்மையாக தன்பால் வளரவேண்டுமென்கிற தேவையிருக்கின்றது. இங்கே "நீர் அடுத்தவரின் நகலைப் போன்று இருக்க வேண்டாம்" என்கின்ற எச்சரிக்கை விடுக்கப்படுகின்றது. நீர் நீராக இரும், இருந்துகொண்டு கடவுள் உம்மை எவ்வாறு உருவாக்க வேண்டுமென்று கனவு காண்கிறாரோ அவ்வாறே உருவாகும். மேலும் திருத்தந்தையவர்கள் இளையோர் முதிர்ச்சியில் வளர்வதனை எவ்வாறு அடையமுடியும் என்பதற்காக மூன்று வழிகளைக் காண்பிக்கின்றார்.

1. சகோதரத்துவப் பாதையானது அடுத்தவரில் மறைந்திருக்கின்ற அழகினையும், அவர்கள் கடவுளின் படைப்புக்கள், தந்தையின் பிள்ளைகள் என்கின்ற மாண்பினையும் காண உதவுகிறது. இச்சகோதரத்துவமானது பின்வரும் ஆபிரிக்க நாட்டுப் பழமொழியில் அழகாக விபரிக்கப்பட்டுள்ளது: "விரைவாகச் செல்ல வேண்டுமாயின் தனிமையில் செல். அதிக தூரம் செல்ல வேண்டுமாயின் இணைந்து செல்" ('If you want to go fast, go alone. If you want to go far, go together').

2. இளையவராகவும், அர்ப்பணிப்புடனும் இருக்கும்போது ஒருவர் குழு என்கிற நிலையினைத் தாண்டிச் செல்கின்றார். அப்படி செயற்படும்போது முதியோருக்கு உதவுவதிலும், நோயாளர்களைப் பராமரிப்பதிலும், ஏழை மற்றும் அயலாருக்கும், வீடற்றோருக்கும், தேவையில் இருப்போருக்கும் நேசக்கரம் நீட்டுவதிலும் முன்னிற்பார். மாற்றத்திற்கான பாதையில் இளையோர் முதற்பாத்திரமாக நின்று செயலாற்ற வேண்டுமென்பது முக்கியமாகும்.

3. துணிவுமிக்க மறைபரப்பாளர்கள் எவ்விடத்திலும் நற்செய்தியின் சாட்சிகளாகத் திகழ அழைக்கப்படுவதுடன், மறைபரப்புப் பணிக்கு எல்லைகள் கிடையாது என்பதனையும் உணர வேண்டும். ஆண்டவர் அனைவரையும் மறைபரப்புப் பணிக்கு தேடுகின்றார், அனைவரும் அப்பணியில் பங்கெடுக்க வேண்டும்.

## அலகு 6: தங்களது வேர்களில் இளையோர்

இவ்வலகானது இளையோர் தங்களைத் தாங்களே அவர்களது வேர்களிலிருந்தும் (மூலங்கள்), பண்பாடுகளிலிருந்தும் அகற்றிவிடக் கூடாதென கேட்டு நிற்கிறது. அத்தகைய புறக்கணிப்பானது இளையோர் ஏனைய சித்தாந்தங்கள் பால் ஈர்க்கப்பட்டு அவர்களது வரலாற்றினை மறக்கச் செய்வதுடன், அவர்களது முதியோர்களின் அனுபவத்தினை பெற்றுக் கொள்வதனையும் தடுத்துவிடும். திருத்தந்தை தமது கருத்தில் "இளையோர் எதிர்கொள்ளும் புதிய சித்தாந்தங்கள் அவர்களது வரலாற்றினையும், முதியோரின் அனுபங்களையும் திரிவுபடுத்தி அவை இளையோருக்கு உரியவையல்லவென்று இழிவுபடுத்திவிடும்" என்கிறார். அத்துடன் இளையோரின் சிந்தனையில் முதியோராக வளர்வது ஒரு சிக்கலாகக் கொள்ளப்படுகிறது. மேலும் இத்தகைய சிந்தனைகள் இளையோர் மத்தியில் ஒரே விதமான சிந்தனையை உருவாக்கி, அவர்களது ஆரம்பங்கள் பற்றிய விடயங்ளை மறைத்துவிடும். மேலும் இத்தகைய சிந்தனைகள் இளையோரிடத்தில் வாழ்க்கை நம்பிக்கைகளைக் குறித்து மேலோட்டமான கருத்தினை ஊட்டுவதனால் அவற்றை இளையோர் புறக்கணிக்க வேண்டுமென திருத்தந்தை கேட்டு நிற்கின்றார்.

ஒருபக்கத்தில் மேற்கூறப்பட்ட சித்தாந்தங்களை புறக்கணிக்க அழைப்பு விடுக்கும் திருத்தந்தை மறுபக்கத்தில் முதியோர்களுடனான உறவில் இளையோர் வளரவேண்டுமென அழைப்பு விடுக்கின்றார். "இளையோர் முற்கால வாழ்வின் செல்வத்தினை கண்டுபிடிக்க உதவுவதும், அவற்றின் நினைவுகளை பொக்கிசமாகப் பேணவும், அவற்றினை தங்களது வாழ்வின் தெரிவாகவும், வாய்ப்பாகவும் பயன்படுத்த உதவுவது முதியோர் அவர்கள் மட்டில் செய்யும் உண்மையான அன்பின் செயலாகும்" என்கிறார் திருத்தந்தை. விவிலியத்தில் பத்துக் கட்டளைகளில் நான்காம் கட்டளையும், ஞான நூல்களும் இதனை வலியுறுத்துகின்றன. அவ்வகையில் முதியோர் பின்வரும் வழிகளில் இளையோருக்கு உதவலாம்.

- ❖ அன்பில்லாத வாழ்வு வறண்ட வாழ்வாகும்
- ❖ எதிர்காலம் குறித்த பதட்டம் மேற்கொள்ளப்படக்கூடியது.
- ❖ பெறுவதிலும் பார்க்க கொடுப்பதிலேயே மிகுந்த மகிழ்ச்சியுண்டு.
- ❖ அன்பு வார்த்தைகளில் மாத்திரமல்ல செயல்களிலும் காட்டப்பட வேண்டும்.

இவ்வலகின் நிறைவாக திருத்தந்தை இளையோருக்கு கூறுவது யாதெனில்: "வயது முதிர்ந்தவர்கள் பொருளற்ற கடந்த காலத்தினை பிரதிநிதித்துவம் செய்கின்றார்கள் என்றும், அவர்கள் எப்போதும் இளையோர் எவ்வாறு நடக்க வேண்டுமென தங்களுக்கு தெரியுமென எண்ணுகிறார்கள் என்றும் எண்ணுகின்ற எண்ணத்திலிருந்து விடுபட்டு, இறையாவியால் வழிநடத்தப்பட்டு, ஒன்றாக இணைந்து நல்லுலகினைக் காணும் சிந்தனையில் வளரவேண்டும்" என்கிறார்.

## அலகு 7: இளையோர் பணி

வளர்ச்சி பெற்ற இளையோர் பணியினை ஆதரிப்பதில் திருத்தந்தையவர்கள் பொதுச்சங்க முறையினை பரிந்துரை செய்கிறார். முற்காலத்தில் பயனளித்துள்ள மட்டுப்படுத்தப்பட்ட அல்லது சுதந்திரமான, பாரம்பரிய அல்லது முன்னேற்றகரமான முறைகள் எதுவாயினும் அவற்றை பயன்படுத்த வேண்டும். இதில் பிரதானம் யாதெனில் மகிழ்வின் நற்செய்தியின் செயலாக்கம் நிறைந்த தொடர்பாடலை ஆதரிக்க வேண்டும். பொதுச்சங்க முறைமையானது யாரையும் விலக்கிவிடாமல் அனைவருக்குமான சக பொறுப்புணர்ச்சியினை வழங்குகிறது. திருஅவையின் ஒற்றுமையானது ஒற்ற தன்மை உடைத்தானது என்கிற கருத்தினை விடுத்து பல்வேறுபட்ட கொடைகளைக்கொண்ட வலைப்பின்னலென உணர வேண்டும்.

இளையோர் பணியில் இரண்டு முறைமைகள் முன்னிலை பெறுகின்றன. அதில் முதலாவதாக தேடிச்செல்லல், இரண்டவதாக வளர்ச்சியாகும். தேடிச்செல்லல் என்பதனால் நாம் புரிந்துகொள்வது யாதெனில், யாரெல்லாம் திருஅவைக்கு வெளியே நிற்கின்றார்களோ அவர்களை சமூக வலைத்தளங்கள், பாடல்கள், வீடியோக்கள் மற்றும் ஏனைய வழிமுறைகளால் கண்டிபிடித்து அத்தகைய இளையோரது இதயங்களை கொள்ளை கொள்வதாகும். மறுபக்கத்தில் வளர்ச்சியென்பது யாதெனில் ஏற்கனவே திருஅவையில் உள்ளவர்கள் தங்களது கிறிஸ்தவ வாழ்வில் அன்பினை ஆழமாக உணரவும், அதனூடாக கிறிஸ்தவ கோட்பாடுகளிலும், அறநெறியில் ஆழமாக வளர்வதாகும். கிறிஸ்தவ கோட்பாடானது நற்செய்தி அறிவிப்பில் வளர்வதிலும், அறநெறியானது சகோதர அன்பில் வளர்வதிலும்

நன்றி!

தொடரும்..........................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உன் இதயம் நொறுங்கும் போது... நான் உன்னை நெருங்கி வருகிறேன் என் மகளே... என் மகனே!...

என் தகப்பன் இயேசு கிறிஸ்துவின் தூய திரு இரத்தத்தால்
விலைகொடுத்து மீட்கப்பட்டவர்களே!
நாம் எப்போதும் இயேசுவுக்குள் இருக்கிறோமா?
என்ற வினா எம் இருதயத்துள் ஒலித்ததுண்டா?
இதோ இயேசு உங்களோடு பேச மிகவும் மிகவும்
ஆவலாக இருக்கிறார்.

கிறிஸ்தவ வாழ்வு என்பது வெறுமனே தினம் திருப்பலி
பார்ப்பதும், பக்தி சபைகளில் இணைந்து பொதுச் சேவை
செய்வது மட்டுமல்ல அதனையும் தாண்டி அதற்கு அப்பால்
இயேசுவோடு காத்திருந்து கதைப்பது இயேசுவோடு
நடப்பது இயேசுவோடு வாழ்வது

ஆடுகளைப் போல் நாம் அனைவரும்
வழிதவறி அலைந்தோம்
நாம் எல்லாரும் நம் வழியே
நடந்தோம்
ஆண்டவரோ நம் அனைவரின்
தீச் செயல்களையும்
அவர் மேல் சுமத்தினார்

என்ற எசாயா 53:5 வசனத்தினை முன்னிட்டு
அவருக்கு நேர்ந்ததைப் பற்றி
அக்கறை கொண்டவர் யார்? எசாயா 53:8
வசனம் உங்களிடம் கேள்வி கேட்கிறது

உலகில் நீங்கள் இருக்கும் வரை உபத்திரவம் உண்டு
ஆனாலும் திடமனதாயிருங்கள் உலகத்தை நான்
வென்றேன் என்ற அருள் நாதன் இயேசுவின்
வார்த்தையை கேட்டிருக்கிறோம்
உயிருள்ள தகப்பனாக எம்மோடு இருக்கிறார்
என்ற உணர்வை எவ்வாறு அனுபவிப்பது என்பதை
நற்கருணை ஆண்டவரின் ஆசீருடன் இப்பாகம்
உங்கள் கவலைகள் அனைத்தையும் மாற்ற
ஏன் இவ்வுலகின் துன்பங்கள்...
இத் துன்பத்தில் உண்மையான இயேசு உங்களை
தேற்ற உங்கள் இதய கதவை தட்டி கூறும்
வார்த்தைகளை தொடரும் பாகத்தில்
எழுத என் அருள் நாதன் இயேசுவின் பொருட்டு
அடிபணிகிறேன்.

ஆக்கம் : மேரி பூரனி

# கிறிஸ்துமஸ் பண்டிகை

கிறிஸ்துமஸ் என்றவுடன் எல்லாருக்கும் முதலில் நினைவுக்கு வருவது கிறிஸ்தவ நண்பர்கள் வீட்டிற்கு சென்றால் கேக், தடபுடல் விருந்து தான். ஆனால் கிறிஸ்துமஸ் கொண்டாட்டம் துவங்கிய பின்னனியும் அதில் ஏற்பட்ட பல மாறுதல்கள் குறித்தும் பலருக்கும் தெரியாது.

இயேசு கிறிஸ்துவின் பிறந்த தினம் தான் கிறிஸ்துமஸ் என்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்று. ஆனால் இயேசு நாதர் எப்போது பிறந்தார், கிறிஸ்துமஸ் என்ற வார்த்தையின் பின்னணி ஆகியவை சுவாரஸ்யமானது.

கிறிஸ்துமஸ் என்ற வார்த்தை "கிறிஸ்ட் மாஸ்" என்ற 2 வார்த்தைகளில் இணைப்பு மூலம் உருவானது. இயேசு கிறிஸ்து பிறந்த ஆண்டு சரியாகத் தெரியவில்லை என்பதால் கி.மு. 7இற்கும் கி.மு 2இற்கும் இடைப்பட்ட காலத்தில் அவர் பிறந்திருக்கலாம் என்று வரலாற்று ஆசிரியர்கள் கருதுகின்றனர்.

அதேபோலவே யூதர்களின் பருவகாலம், நாட்காட்டிகள் மூலம் கணக்கிட்டு, ஒரு யூக அடிப்படையில் தான் டிசம்பர் 25ம் திகதி கிறிஸ்மஸ் பண்டிகையாக கொண்டாடப்படுவதாக வரலாற்று ஆசிரியர்கள் தெரிவிக்கின்றனர்.

கிறிஸ்மஸ் பண்டிகையை முதன் முதலில் 4ம் நூற்றாண்டை சேர்ந்த மேற்கத்திய கிறிஸ்தவர்கள் கொண்டாடியதாக சில வரலாற்றுக் குறிப்புக்கள் உள்ளன. ஆனால் வேறு சில பிரிவுகளை சேர்ந்த கிறிஸ்தவர்கள் அதற்கு மறுப்பு தெரிவித்து, ஜனவரி 6ம் திகதி இயேசு பிறந்ததாகவும் கொண்டாடினர்.

எப்படி இருப்பினும் கிறிஸ்மஸ் பண்டிகை என்பதை உலகம் முழுவதும் கிறிஸ்தவ மக்கள் மிகச் சிறப்பான நாளாக கொண்டாடி மகிழ்கின்றனர். இந்தத் தினத்தை கிறிஸ்தவர்கள் விசேஷமாக கருதுவதால் அன்றைய தினம் பல புதிய பணிகளைத் தொடங்குவதையும் அவர்கள் வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

கி.பி 800ம் ஆண்டு கிறிஸ்மஸ் பண்டிகை அன்று சார்லிமேனி என்ற பேரரசன் மன்னராக பதவியேற்றான். அதன்பிறகு கி.பி. 855ம் ஆண்டு இடமுன்ட் என்ற தியாகி மன்னராக முடி சூட்டப்பட்டான். கடந்த 1066ம் ஆண்டு இங்கிலாந்து மன்னன் வில்லியம் மன்னராக முடி சூட்டப்பட்டான். மேலும் 1377ம் ஆண்டு இங்கிலாந்து மன்னன் ரிச்சாட் கிறிஸ்மஸ் பண்டிகையை மிக விமர்சையாக கொண்டாடினார். கடந்த 1643ம் ஆண்டு இந்தோனேஷியாவில் கண்டுபிடிக்கப்பட்ட புதிய தீவுக்கு "கிறிஸ்மஸ் தீவு" என்று பெயரிடப்பட்டது.

ஆக்கம் : மேரி றொஷானி
இலிங்கநகர்

# பாலன் இயேசு உள்ளத்தில் தங்க இடம் கொடுப்போம்

துல்லிய பட்டுப் போன்ற
தூயவர் மரியாள் கையில்
மெல்லிய பாலன் இயேசு
விளக்கென புன்னகை தான்!
நல்லவர் உள்ளம் போல
நலம்பெறப் பிறந்த செல்வன்
இல்லை என்னாத வாறு
இருகரம் விரித்து நின்றான் - இயேசு காவியம்

கிறிஸ்மஸ் இயேசுக் கிறிஸ்துவின் இறை மகனின் பிறந்த நாள் விழா இன்று இறைவனின் அளவிட முடியாத அன்பைக் கொண்டாடும் நாள் இறைவனே மனுவுரு எடுத்து இந்தப் பூமியில் பிறந்த நாள் இவ்வுலக வாழ்வு மேன்மை அடைந்த நாள் இறைவன் தன் மகன் வாயிலாக நம்மோடு பேசத் திருவுளம் கொண்டார். பல முறை பலவகைகளில் முற்காலத்தில் இறைவாக்கினர் வழியாக நம் மூதாதையரிடம் பேசிய கடவுள் இவ் இறுதி நாட்களில் தம் மகன் வழியாக நம்மிடம் பேசியுள்ளார். இந்த இறைவெளிபாட்டின் மறைபொருளை நற்செய்தியில் நாம் காண்கிறோம். கடவுளை யாரும் என்றுமே கண்டதில்லை தந்தையின் நெஞ்சத்திற்கு நெருக்கமானவரும் கடவுள் தன்மை கொண்டவருமான ஒரே மகனே அவரை வெளிப்படுத்தினார். மனுவுரு எடுத்த இறைமகன் அப்போது தோன்றியவரல்ல அவர் என்றென்றும் வாழ்பவர் அவரே இறைவனின் வாக்கு இறைவனின் உயிர் மூச்சு அவரே இறைவன் தொடக்கத்தில் வாக்கு இருந்தது அவ்வாக்கு கடவுளோடு இருந்தது அவ்வாக்கு கடவுளாய் இருந்தது.

இயேசுவின் பிறப்பினால் ஏற்பட்ட விளைவு புதிய வாழ்வு உரிமை வாழ்வு மானிட வாழ்வு தாழ்வுக்குரியதல்ல அவமானத்திற்குரியதல்ல வெட்கத்திற்குரியதல்ல இயேசுவின் பிறப்பால் மனித வாழ்வு உயர்வடைந்தது மாற்றம் பெற்றது இனிவரும் வாழ்வுக்கு எல்லைகள் இல்லை இயேசு நமக்கு உயர்வான வாழ்வுக்கு வழியைக் காட்டியுள்ளார். ஆவரிடம் நம்பிக்கை கொண்டு அவரை ஏற்றுக் கொண்ட ஒவ்வொருவரும் அவர் கடவுளின் பிள்ளைகள் ஆகும் உரிமையை அளித்தார். இவரது நிலையிலிருந்து நாம் யாவரும் நிறைவாக அருள் பெற்றுள்ளோம். இதுவரை நாமும் எத்தனை கிறிஸ்து பிறப்பு விழாவைக் கொண்டாடியிருப்போம் நம்முடைய நடைஉடைஉணர்வுகளில் நிறைய மாற்றத்தைச் செய்திருப்போம் ஆனால் நம் உள்ளத்தில் ஏதாவது மாற்றம் செய்திருக்கிறோமா என்றால் இல்லவே இல்லை அப்படியே தான் வாழ்கிறோம் நம் இயேசு நம் உள்ளத்தில் தங்கி இருக்கின்றாரா இல்லையே. பொய்யும், புரட்டும், எரிச்சலும், பொறாமையும், பாவங்களும் நிறைந்த வாழ்வு தானே வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இப்படித்தான் வாழவேண்டும் என்று எண்ணாது எப்படியும் வாழலாம் என்றுதானே வாழ்ந்து கொண்டிருக்கிறோம் நம்மைச் சிந்தித்துப் பார்த்து பாலன் இயேசு நம் உள்ளத்தில் வந்து தங்க இடம் கொடுப்போம். அவரே நம் பாவ இருளை அகற்றி நம் உள்ளத்திலும் இல்லத்திலும் தங்கி மனமகிழ்ச்சியையும் சந்தோசத்தையும் சமாதானத்தையும் தந்தருளுவார்.

"அஞ்சாதே நான் உன்னோடு இருக்கிறேன் கலங்காதே நான் உன் கடவுள் நான் உனக்கு வலிமை அளிப்பேன் உதவி செய்வேன் என் நீதியின் வலக்கரத்தாலே உன்னைத் தாங்குவேன்" (எசா 41:10)

தாழ்ச்சி சாந்தம் நிறைந்த இதயத்தில் இயேசுவைக் குடிவைத்து வழிபடுபவர்களுக்குத் தான் இந்தக் கிறிஸ்மஸ் ஓர் உண்மையான கொண்டாட்டம் இயேசுக்கிறிஸ்து விண்ணக இன்பத்தைத் துறந்து இந்த பூமியிலே ஏழையாகப் பிறந்து தம்மை முழுவதையும் நமக்காக கையளித்தார் இத்தகைய தியாகம் நிறைந்த அன்பு இயேசுவைப் பின்பற்றும் நாமும் சுமைகளால் சோர்ந்திருக்கும் உள்ளங்களுக்கும், வறுமையால் வாடிநிற்கும் ஏழைகளுக்கும் நம் இதயத்தில் இருந்து அன்பையும் நம்முடைய கரங்களில் இருந்து உதவியையும் நம் நாவலிருந்து இனிய சொற்களையும் நமது கண்களில் இருந்து கருணையும் காட்டுவோம் என்றால் நிச்சயமாக இயேசு நம் உள்ளத்தில் பிறந்து விட்டார். இந்தக் கிறிஸ்மஸ் நாளில் நாமும் வாழ்ந்து பிறரையும் வாழவைப்போம். பாலன் இயேசு நம்மையும் சந்தோசப்படுத்தி நம்மால் பிறரையும் சந்தோசம் காணும்படி செய்வார்.

ஆண்டவர் எத்துனை இனியவர் என்பதை இந்நன்னாளில் சுவைத்துப் பாருங்கள்

கலாபூஷணம் புலவர் அரியநாயகம் J.P

# கிறிஸ்து பிறப்பு குட்டிக் கவிதைகள்



**மரியா**
மௌனமாகவே வலம்
வந்தவர். அதனால்
தானோ என்னவோ
எல்லோராலும்
பேசப்படுகின்றார்
இன்றும்



**யோசேப்பு**
மறைவாக ஒதுங்க
இருந்தவரை மறக்க
முடியாதவராக
மாற்றலானார்
இறைவன்



**வால்வெள்ளி**
இதுமட்டும் இல்லாமல்
இருந்தால் மூன்று
ஞானிகளும்
சிரமப்பட்டிருப்பார்கள்

**வானதூதர்**
கிறிஸ்து பிறப்பில்
அதிகமாக
பாடுபட்டவர்கள்



**மாட்டுக் கொட்டில்**
இறைமகன்
பிறந்ததாலோ
என்னவோ இன்றும்
சிறப்பிடம்
பெறுகின்றது.



**பொன்**
விலை மதிப்பற்றவர்க்கு
கொடுத்ததாலோ
என்னவோ இதன்
விலையும் அதிகமே



**பெத்லகேம்**
மீட்பரின் பிறப்பு
தான் பேச வைக்கிறது
இன்னும்



**கழுதை**
ஒரே தடவையில்
மரியாவையும்
இயேசுவையும்
சுமந்த பெருமை
உண்டு





**இயேசு**
இவர் இல்லாமல்
கிறிஸ்மஸ்ஸா
சான்சே இல்ல

**இடையர்கள்**
சொல்வதற்கு
ஒன்றுமில்லை
கொடுத்து
வைத்தவர்கள்



ஆக்கம் : திருமதி. ஜோ. அனஸ்ரி அமலராணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெத்லகேம், கலியோ
## புதிய பரிமானத்துடன் எமது பார்வை

நீருண்டு மேகங்கள்
நின்றாடும் உகந்தையில்
திருஅவையின் தாயே உந்தன்
நினைவு என்முன் தோன்றுகையில் என் சிந்தனை இதுவே

அருவி என்பது ஆற்றை நோக்கி போகிறது
ஆறு என்பது கடலை நோக்கி போகிறது
கடல் என்பது எதை நோக்கி?
கடல் என்பது ஒரு துளியின் பயணத்தின் முடிவா?
கடல் என்பது இயக்கமில்லாத இடமா? இல்லை
கடலுக்கு பயணம் உண்டு
அருவியாய் ஆறாய் ஓடி வந்த துளி
இவை கடலில் முடிந்து விடுவதில்லை

திருஅவையின் பக்தியைப் போல் அன்பைப் போல்
தொடர்கிறது கடல் என்பது நிற்கும் நீரும் அல்ல
புதிப்பிக்கப்படும் நீர் ஒரு கட்டத்திற்கு மேல்
கடல் என்பது பக்தியும், அன்பும் விசுவாசத்தின்
புதிய பரிமானத்துடன் கண்ணுக்கு தொரியாத
பயணத்தில் நிற்கிறது.


கடல் எப்படி பயணம் செய்கிறது
மேல் நோக்கி - நீராவியாய்
வானத்தை நோக்கி
மேகத்தை சூடேந்தி
கடல் போல் ஒரு பயணம்
அன்பும், பக்தியும் கலந்த விசுவாச பயணம் செய்ய ஆரம்பிகிறது
ஜெருசலேம் என்ற நகரத்தின் சிற்றூராம் (இறை + இல்லம்., இறைஇல்லம்
(பெத்லகேம்) )
இதுவே நம் கவிதைச் சோலையின் தலைநகரம்

பெத்லகேம் ஒளி மண்டலமாய்
பிரசித்தி பெற காரணம்
யாரால்? ஒரு பெண்ணால்
இளமையின் ராஜ பாட்டையின்
மிதலைப் பந்தாய் நகர்ந்து வரும் இளம் யுவதி
யார் இவள்?
அவள் தான் அன்னை மரியாள்
அந்த எழில் மிகுந்த பெத்லகேமில்
மீட்பின் தாரகையின் தொடக்கமாக
வலம் வந்து கொண்டிருந்தவளிடம்
ஏனைய ஆறுகளுடன் மகாவலியும், கங்கையும்
கலிலேய கடலில் ஒன்றாக சங்கமிக்கும் போது எமது
இறை விசுவாசத்திற்கு மீட்பின் திட்டம்
நிறைவேறுவது அண்மித்த நாள் என்று நினைவில் கொள்
எப்போதும்

அ. ஜெ. நோயல்டானியல்
உவர்மலை

## கர்த்தர் இயேசு பிறந்த கதை

புனித பூமியாம் எருசலேம் மாட்டுத் தொழுவமதில்
மாமரியின் கருவறையில் மன்னர் இயேசு
மனிதனாய் அவதரித்தார்
கன்னி மரியாளின் ஒப்பந்தமான கணவன்
சூசையவர் மறைவாய் மரியன்னையை
விலக்கிட எண்ணிய வேளையிலே
தூதரவர் தூதுரைக்க நல் காவலனாய்
ஆன கதை கேட்டிடுமே
பாரில் வாழும் மாந்தர்களின்
பாவம் போக்க பரிசுத்தர் பிறந்த கதை
பனிமழை பொழியும் நேரமதில்
மலைமீது இடையர்களும் தூங்கிடவே
வானதூதர் செய்தி கேட்டு
விழித்தெழுந்து மகிழ்ந்தனராம்
வழிமீது ஞானியரும் வானமதில்
தோன்றிய காட்சி கண்டு
கர்த்தரவர் பாதம் பணிந்து
சாஸ்ராங்கமாய் விழுந்தனரே
மண்ணில் வாழும் மாந்தர்களே
மனுக்குலம் மீட்படைய மனிதனாய்
அவதரித்த மன்னன் இயேசுவின்
பிறப்பு பெருவிழாவை கொண்டாட வாரீர்
மகிழ்ந்து கொண்டாடிடுவோம்



சு. சுவேக்கா,
பாலையூற்று



## அன்றாட வாழ்வில் தத்துவங்கள்

### 10. சிலரின் சிலேடைக் கதைகள்

காலையிலே இயந்திரம் போல் வேலைகளை முடித்துக் கொண்டு காரியாலயத்துக்கு ஓடுகின்றோம். பஸ்சிலும்(பேருந்திலும்) பஸ்தரிப்பு(பேருந்து) நிலையத்திலும், வீதியிலும், காரியாலயத்திலும் பல வார்த்தைகள் எமது காதுகளில் விழுகின்றன. அவற்றில் சில எமது மனதுக்கு ஆறுதலையும் சந்தோசத்தையும் தருகின்றன. ஆனால் சில வார்த்தைகளோ எமது அமைதியையும், சந்தோசத்தையும் சிதைக்கக் கூடியன. அந்தவகையிலே "டபிள்மீனிங்" அல்லது இரு பொருள்படும் கூற்றுக்களும் எமக்குக் கேட்கத்தான் செய்கின்றன.

எமது சமுதாயத்தில் சிலர் இரு பொருள்படும் விதத்தில் பிரசித்தமாக மற்றவர்களுக்குக் கூறுவதன் மூலம் மனதில் திருப்தியை அனுபவிக்கின்றனர். தனது மனதில் உள்ள ஆசைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியாமையால் அல்லது வெளிப்படுத்த முடியாமையால் பெரும்பாலும் இரு பொருள்படும் விதத்தில் பேசமுனைவர்.

இப்படிப்பட்ட வார்த்தைகளைப் பேசுவோர் தமது வார்த்தைகளை மற்றவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று எண்ணும்பொழுது அவர்கள் மத்தியில் பேசமுனைவர். இதனை எந்த எதிர்ப்புமின்றிச் சிரிப்பாலோ அல்லது முகபாவத்தாலோ உற்சாகம் கொடுக்கும் பொழுது திரும்பத் திரும்ப இவ்வாறு பேச முனைவர்.

சிக்மன் புறொயிட் என்ற உளவியல் அறிஞர் டபிள்மீனிங்கைப்பற்றிக் கூறுகிறார். டபிள்மீனிங்கில் பேசுவோர் வேண்டுமென்று நினைத்துக் கூறுவதில்லை தமக்குக் காம உணர்வு ஏற்படும்போது சிலர் "டபிள்மீனிங்கில் பேச முனைவர். அப்போது அதற்குப் பெண்களிடமிருந்து கிடைக்கும் பிரதிச் செயல்களுக்கேற்ப திருப்திப்படுகிறார்கள். கேட்போர் தமது சிரிப்பால் முகபாவத்தால் அக்கறை காட்டவில்லையேல் கூறுபவர்களுக்குத் திருப்தி ஏற்படாது".

டபிள்மீனிங் வார்த்தைகளால் மற்றவர்களைத் தாக்கவும் முனைகின்றனர். அதேபோன்று ஒருவருக்கு ஒன்றை நேரடியாகக் கூறமுடியாமல் இருப்பதால் மறைமுகமாகக் கூற இந்த டபிள்மீனிங் வார்த்தைகளைப் பயன்படுத்துவோரும் உண்டு. தனது ஆசைகளைப் புதைத்து வைத்துக்கொள்வதால் அது கடினமானதாக இருக்கும் போது இதனை டபிள்மீனிங் வார்த்தைகளால் வெளியிடுவர்.

இதனை எமது நடைமுறை வாழ்க்கையில் பாரத்தால் எதிர்க்காலச் சந்ததியினருக்கு நாம் முன்மாதிரிகையாக வாழ்கிறோமா? எமது வார்த்தைகளை வெளியிடும் போது அளந்து விடுகிறோமா? வெளியிட்ட வார்த்தைகளைத் திரும்ப எடுத்துக்கொள்ள முடியாது.

எமது உள்ளத்திலிருந்தே வார்த்தைகள் வாய்மூலம் வெளிவருகின்றன. மனதைத் தூய்மைப்படுத்துவதன் மூலம் எமது வார்த்தைகளையும் தூய்மைப்படுத்த முடியும். மனம் தூய்மையாகும். அளவுக்கு எமது சொல், செயல், மனம், பார்வை, யாவுமே தூய்மையாகத் தொடங்கும்.

எந்நேரமும் உயர்ந்த இலட்சியத்திலே வாழ்ந்தால் அது எமது மனத்தூய்மைக்கு உதவியாக இருக்கும். ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் அதாவது வெற்றியான, கவலையான, வேதனையான, தோல்வியான நிகழ்ச்சிகளில் இலட்சியத்தை மனதிற்கொண்டு செயற்படும் பொழுது அதனை நன்மையாக முடிகிறது.

இறுதியாக எமது வார்த்தைகள் நல்லவையாக வருகின்றனவா? என்று பார்த்துக் கொள்வோம்.

தொடரும்..........

## உவர்மலை குழந்தை இயேசு ஆலய புனித வின்சன் டீ பவுல் ஆலோசனை சபையின் புனிதரின் நினைவு தினமும் மறைபரப்பு மாத சிறப்புச் செயற்பாடும்

உவர்மலை குழந்தை இயேசு ஆலய புனித வின்சன் டீ பவுல் ஆலோசனை சபையின் தலைவர் சகோதரன் இ. அன்றுகோல்சீன் தலைமையிலும் ஆன்மீக இயக்குனர் அருட்தந்தை செ. சுகுனேந்திரன் குரூஸ் அடிகளாரின் வழிநடத்தலிலும் சபையினரால் கடந்த செப்டெம்பர் மாதம் புனிதரின் நினைவு தின விழா 28.09.2019 அன்று சிறப்புத்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு கொடிதின நிகழ்வும் சிறப்பிக்கப்பட்டது. அன்றைய நாள் சபையில் இணைந்து பணியாற்றி மரித்த சகோதர, சகோதரிகளின் புகைப்படங்கள் காட்சிப்படுத்தி அவர்களும் நினைவு கூறப்பட்டனர் மேலும் உலக மறைபரப்பு மாதமாக பிரகடனப்படுத்திய ஐப்பசி மாதத்தில் ஒவ்வொரு புதன்கிழமையிலும் பாங்கிலுள்ள வயது முதிர்ந்தவர்களை தரிசித்து அவர்களுக்கு செபமாலை வழங்கி அவர்களுக்காக செபித்ததுடன் அவர்களுடன் இனிதே உரையாடி மகிழ்ச்சியை பரிமாற்றிக் கொண்டனர். மேலும் உவர்மலைப் பகுதியில் உள்ள பிறசமய வயது முதிர்ந்த சகோதரர்களை சந்தித்து அன்பளிப்புக்கள் வழங்கி ஆறுதல் வார்த்தைபேசி அவர்களுக்காகவும் செபித்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும். மற்றும் மறைபரப்பு மாத அதிசிறப்பு செயற்பாடாக இலிங்கநகர் கருண நிவாச முதியோர் இல்ல சகோதரர்களுக்கு எதிர்வரும் சனிக்கிழமை பாங்கிலிருந்து மதியபோசனம் சேகரிக்கப்பட்டு கொடுப்பதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தகவல்
உபதலைவர் திருமதி ச.சிறில்பத்திநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருத்தந்தை பேசுகிறார்.

திருத்தந்தை பிரான்சிஸ் 2019 ஒக்டோபர் மாதத்தை சிறப்பான மறைபரப்பு மாதமாகப் பிரகடனப்படுத்தினார். 1919ல் திருத்தந்தை 15வது பெனடிக்ட் வெளியிட்ட Maximum Illud என்ற சுற்றுமடலின் 100வது ஆண்டு நிறைவை முன்னிட்டு இந்தப் பிரகடனம் இடம் பெற்றது. எனவே இம்மாதத்தில் Maximum Illud மடலில் திருத்தந்தை என்ன கூறுகின்றார் என்று சிந்திப்போம்.

20ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் மறைபரப்பு பணியில் புதிய ஆர்வத்தையும் வேகத்தையும் திருச்சபையில் உருவாக்கத் திருத்தந்தை 15ம் பெனடிக் விரும்பினார். 1ம் உலக யுத்தம் முடிவடைந்து இருந்த காலப்பகுதியில் திருச்சபையில் மறைபரப்பு ஆர்வம் குறைந்திருப்பதை அவர் உணர்ந்தார். விஞ்ஞானத்தின் வளர்ச்சியும் சவாலுக்கு உரிய ஒன்றாக மாறி இருந்தது. இழப்புகளும், 1ம் உலக யுத்தத்தின் தாக்கங்களும் 2ம் உலகப் போருக்கான அறிகுறிகளாக அமைந்தன. மேலைத்தேயக் குடியேற்றவாத நாடுகள் தாம் ஆட்சி புரிந்த நாடுகளில் மறைபரப்புப் பணியை முன்னெடுத்திருந்தன. இந்நாடுகளில் வாழ்ந்த மக்கள் ஐரோப்பாவில் ஏற்பட்ட ஒவ்வொரு மாற்றத்தினாலும் பாதிக்கப்பட்டார்கள். அதன் விளைவாக மறைபரப்பு பணி பாதிக்கப்பட்டது. இந்த பின்னணியிலே சுற்றுமடல் உருவாக்கம் பெற்றது.

## நினைவில் கொள்ள வேண்டியோர்

- ❖ நம் குழந்தைகள், சிறுவர்கள்
- ❖ யாருமற்ற அனாதைகள், முக்கியமாகப் பெற்றோரை இழந்த சிறுவர், சிறுமியர்
- ❖ கருவிலிருக்கும் சிசுக்கள், கருவில் அழிக்கப்பட்ட சிசுக்கள்
- ❖ கொல்லப்பட்ட சிறுவர், சிறுமியர்
- ❖ நோயாளிகளாக, மாற்றுத் திறனாளிகளாகவுள்ள, மனநிலை சிதைவடைந்த சிறுவர், சிறுமியர்
- ❖ தவறாக வழிநடத்தப்பட்டு, துன்புறுத்தப்படுகின்ற, மற்றும் அகதிகளாகவுள்ள சிறுவர், சிறுமியர்
- ❖ கல்வி, வாழ்வுரிமை மறுக்கப்பட்ட சிறுவர், சிறுமியர்
- ❖ தொழிலாளர்களாக்கப்பட்ட சிறுவர், சிறுமியர்
- ❖ துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்ட சிறுவர், சிறுமியர்
- ❖ சீர்திருத்த சிறைகளிலும், முகாம்களிலும் வாடுகின்ற சிறுவர், சிறுமியர்

## திருகோணமலையின் முதல் கத்தோலிக்கர் வரலாறு

1549-1552 காலப்பகுதியில் ஆட்சியுரிமை தொடர்பான முரண்பாட்டில் திருகோணமலையில் இருந்த ஒரு இளவரசன் அவரது உறவினர்களுடன் இந்தியாவின் மீன்பிடித் துறைகளுக்குத் தப்பிச் சென்றார். அங்கு பரதவ குல கத்தோலிக்கரால் வரவேற்கப்பட்டார். அருட்பணி. என்றிக என்றிக்கஸ் SJ இவர்களைச் சந்தித்து ஆறுதல்படுத்தினார். இந்த நற்பண்புகளால் கவரப்பட்ட இவர்கள் கத்தோலிக்கர்களாகத் தம்மை மாற்றும்படி கேட்டனர். மறை அறிவிக்கப்பட்டு, 08 வயதான இளவரசன் டொம் அலொன்சோ (Dom Alonso) என்ற பெயரில் திருமுழுக்கு வழங்கப்பட்டார். கோவாவிலிருந்த கல்லூரியில் இணைக்கப்பட்டார்.

பரதவ குலத்தவரும், போர்த்துக்கேயப் படைகளும் இணைந்து திருகோணமலைக்கு வந்து இந்த இளவரசனுடைய ஆட்சியுரிமையைப் பெற்றுக் கொடுத்தனர். இப்பரதவர்களும் மற்றும் திருகோணமலையில் கத்தோலிக்கராக மாறிய சில வன்னியர்களுமே திருகோணமலையின் முதல் கத்தோலிக்கராகக் கருதப்படுகின்றனர். இவர்கள் திருகோணமலை, கொட்டியாரம் ஆகிய இடங்களில் குடியேறினர்.

நீண்டகாலமாக முறையான வழியில் குருக்களின் பணி கிடைக்காத போதும் இவர்கள் தமது விசுவாசத்தைப் பாதுகாத்தனர். 1566இல் அருட்பணி. மெல்கியோர் நூன்ஸ் அப்போதைய கொச்சின் மறைமாவட்ட ஆயருடன் இலங்கைக்கு வந்தார். "திருகோணமலையிலும் மட்டக்களப்பிலும் நாங்கள் பராமரிக்க வேண்டிய கிறிஸ்தவர்கள் பலர் இருக்கின்றார்கள்" என அவர் குறிப்பிடுகிறார்.

## பொதுநிலை கிறிஸ்தவனின் உதாரண வாழ்வு

**கன்னியா பிரதேசத்தில் வாழ்ந்த ஒரு மறையாசிரியரின் அனுபவங்கள், காலம் : 1985 -1986**

அக்காலத்தில் வெல்வெரி ஆலயத்தில் ஒரு பாலர் பாடசாலை இயங்கியது. அங்கு ஆசிரியர்களாக இருந்த செல்வி விமலா, செல்வி கருணா ஆகியோர் கன்னியாவிலிருந்து நடந்து அப்பாடசாலைக்குச் செல்வார்கள். ஞாயிற்றுக் கிழமைகளில் அருட்பணி. நோபட்டுக்கு உதவியாக பன்குளம் அந்தோனியார் ஆலயத்திற்கு செல்வி விமலா மறைக்கல்வி கற்பிக்க செல்வார். அங்கு 10-12 மறைக்கல்வி மாணவர்கள் கல்வி கற்றார்கள். அவர்களில் பலர் தொலைவிலிருந்து வருவதால் சிலவேளைகளில் மதியம் வரை நின்று அவர்களுக்கு கற்றுக் கொடுத்தார். இந்து மதத்தவராக இருந்தாலும் கத்தோலிக்க விசுவாசத்தையும் செபங்களையும் செல்வி கருணா இக்காலத்தில் கற்றுக் கொண்டார். அவருடைய விசுவாச அறிவைக் கண்ட அருட்பணி. நோபட் இலிங்கநகர் பகுதியில் அவரை மறைக்கல்வி கற்பிக்க நியமித்தார். அக்காலத்தில் பேராலயத்தின் அருகில் இயங்கிய மறைக்கல்வி நிலையத்தில் இவர் மறைக்கல்வி கற்பிக்க பயிற்றப்பட்டார். அங்கு பரீட்சையில் இரண்டாவதாகவும் கற்பித்தலில் முதலாவதாகவும் தேர்ச்சி பெற்றார். இதனை மேற்பார்வை செய்தோர் திருமதி. சௌந்தரம் ஆசிரியை மற்றும் திருமதி றெஜினா ஆசிரியை ஆவார். ஏறத்தாழ 07 மாதங்கள் ஒரு இந்து மதத்தவராக கத்தோலிக்க மறைக்கல்வி கற்பித்த அவர் திருமுழுக்கு பெற்று கத்தோலிக்கரானார். இக்காலப்பகுதியில் வின்சன்ட் டி போல் சபையின் உறுப்பினராகவும் செயலாற்றினார். அவரோடு பயிற்றப்பட்ட இன்னுமொரு மறை ஆசிரியை நம் மறைமாவட்டத்தின் மூத்த மறையாசிரியர்களில் ஒருவரான திருமதி. சகாயம் (பாலையூற்று) ஆவார். **(திருமதி கருணாவதி அன்றுகொல்சின் அவர்களின் அனுபவப்பகிர்வு -உவர்மலை)**

## விவிலியம் பேசுகிறது

இயேசு இந்தப் பன்னிருவரையும் அனுப்பியபோது அவர்களுக்கு அறிவுரையாகக் கூறியது : "பிறஇனத்தாரின் எப்பகுதிக்கும் செல்ல வேண்டாம். சமாரியாவின் நகர் எதிலும் நுழைய வேண்டாம். மாறாக, வழி தவறிப் போன ஆடுகளான இஸ்ரயேல் மக்களிடமே செல்லுங்கள். அப்படிச் செல்லும் போது "விண்ணரசு வந்து விட்டது" எனப் பறைசாற்றுங்கள்.......

கொடையாகப் பெற்றீர்கள். கொடையாகவே வழங்குங்கள்..........

அந்த வீட்டுக்குள் செல்லும்பொழுது, வீட்டாருக்கு வாழ்த்துக் கூறுங்கள். வீட்டார் தகுதியுள்ளவராயிருந்தால், நீங்கள் வாழ்த்திக் கூறிய அமைதி அவர்கள் மேல் தங்கட்டும்".

மத்தேயு 10: 5-12

## சிந்திக்க......

### கனிகள்

அன்று சந்தையிலிருந்து அம்மா பழங்கள் வாங்கி வந்து வீட்டு குளிர்சாதனப் பெட்டியில் வைப்பதை மகன் பார்த்தான். அன்றிரவு நடக்க இருந்த விருந்திற்கு அம்மாவும் அக்காவும் மாலையில் அந்தப் பழங்களைக் கழுவி வெட்டி ஆயத்தம் செய்யத் தொடங்கினர்.

ஒவ்வொரு பழமும் பழக்கலவை செய்வதற்காக வெவ்வேறு விதமாக வெட்டப்பட்டது. வாழைப்பழத்தின் தோல் உரிக்கப்பட்டு துண்டு துண்டாக நறுக்கப்பட்டது. மாம்பழத்தின் தோல் சீவப்பட்டு துண்டாக நறுக்கப்பட்டது. அன்னாசிப்பழத்தின் முடியும் காம்பும் உடைத்து அகற்றப்பட்டன. தோல் சீவப்பட்டு "கண்கள்" அகற்றப்பட்டு துண்டுகளாக்கப்பட்டது. பப்பாசிப்பழத்தின் தோல் சீவப்பட்டு விதைகள் அகற்றப்பட்டு துண்டுகளாக வெட்டப்பட்டது.

இன்னும் பல பொருட்கள் சேர்க்கப்பட்டு சுவையான பழக்கலவை பரிமாறப்பட்டது. ஆனால் மகனுக்கு மட்டும் சிறிய கவலை இருந்தது. வெட்டி எறியப்பட்ட பழக்கழிவுகளோடு அவன் பேசத் தொடங்கினான். "உங்களை இப்படி வெட்டித் துண்டாக்கிக் கழிவாக எறிந்தது கவலையாக இருக்கிறது". பழக்கழிவுகள் பதில் தந்தன.

" எமது சதை உங்களுக்கு உணவாகிறது. எங்களது தோல் ஆடு மாடுகளுக்கு உணவாகிறது. விதைகளிலிருந்தும், முடியிலிருந்தும் புதிய மரமாக நாங்கள் மீண்டும் பிறக்கிறோம். எஞ்சிய எமது பகுதிகள் உரமாக மண்ணுக்குச் செல்கின்றன. அதனால் நாங்கள் மகிழ்வோடு இருக்கிறோம்". மகனுக்கு மனம் தெளிவானது. தான் எப்படியிருக்க வேண்டும், என்ன செய்ய வேண்டுமென்பதை அவை கற்றுக் கொடுத்தன. மகிழ்வோடு திரும்பினான்.

**நற்செய்தி மீன் அறிவிப்பு ஆண்டு - 2020**

**ஜனவரி மாதத்துக்குரிய பக்தி முயற்சி**
**இயேசுவின் பாலத்துவம்**

## பிறநாட்டு மறைப்பணியாளர்களின் பார்வையில்.....

அருட்பணி மைக்கல் டி மெல்லோ
( இறப்பு - 25.03. 1706 )

நாரங்கெட பணித்தளத்தில் கத்தோலிக்கரின் வாழ்வைச் சீர்படுத்த அடிகளார் முயன்றார். இப்பணித்தளத்தில் புனித யோசேவாஸின் முயற்சிகள் எந்த விதமான பலனும் இன்றி முடிவடைந்தன. அச் சூழ்நிலையில் ஏறத்தாழ 07 மாதங்கள் பணிபுரிந்து அக் கத்தோலிக்கரை முழுமையாகச் சீர் திருத்தியவர் டி மெல்லோ அடிகளே ஆவார். உதாரணமாக, ஒரு பிரபல கத்தோலிக்கர் பலதார முறையைப் பின்பற்றினார். அவரை இடைவிடாது தொடர்ந்து சென்று, திருச்சபையின் போதனையான ஒருதார முறைக்கு திரும்புமாறு அடிகளார் வேண்டினார். முதலில் அவர் இணங்கவில்லை. எனினும் தொடர்ச்சியாக அவரை சந்தித்து அடிகளார் இக் கருத்தை வலியுறுத்திக் கொண்டே இருந்தார். அவருக்காக நீண்ட நேரம் முழங்காலில் இருந்து கண்ணீரோடு செபித்தார். இறுதியில் அவர் ஒருதார முறைக்குத் திரும்பினார்.

விசுவாசிகளைத் தொடர்ச்சியாகச் சந்திப்பது மறைபணி வெற்றி பெற ஒரு நல்ல வழிமுறையாகும்.

## புனிதர் பேசுகிறார்

**திருத்தூதரான புனித பேதுரு**
**தி.ப 2: 36-41**

ஆகையால் நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவைக் கடவுள் ஆண்டவரும் மெசியாவும் ஆக்கியுள்ளார் என்பதை இஸ்ராயேல் மக்களாகிய நீங்கள் அனைவரும் உறுதியாக அறிந்து கொள்ளுங்கள்.

அவர்கள் இதைக் கேட்டு உள்ளம் குத்தப்பட்டவர்களாய் பேதுருவையும் மற்றத் திருத்தூதர்களையும் பார்த்து, "சகோதரரரே, நாங்கள் என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டார்கள். அதற்குப் பேதுரு, அவர்களிடம், "நீங்கள் மனம் மாறுங்கள். உங்கள் பாவங்களிலிருந்து மன்னிப்புப் பெறுவதற்காக ஒவ்வொருவரும் இயேசுக் கிறிஸ்துவின் பெயரால் திருமுழுக்குப் பெறுங்கள். அப்பொழுது தூய ஆவியைக் கொடையாகப் பெறுவீர்கள். ஏனெனில் இந்த வாக்குறுதியானது உங்களுக்கும், உங்களது பிள்ளைகளுக்கும், தொலைவிலுள்ள யாவருக்கும், ஆண்டவராகிய கடவுள் தம்மிடம் அழைக்கும் அனைவருக்கும் உரியது" என்றார்.

## அன்றும் இன்றும்......

**மூதூர் பங்கைச் சேர்ந்த திரு. செலஸ்தீன் ஜேசுதாசன் அவர்களின் அனுபவத்திலிருந்து.........**

ஏறத்தாழ 1950ம் ஆண்டளவில் மூதூர் பங்குத் திருவிழாவிற்காக ஒவ்வொரு குடும்பத்திடமிருந்தும் ஒரு ரூபாய் பணமும் ஒரு தேங்காயும் அறவிடப்பட்டது. அக்காலத்தில் நான்கு சுற்றுப்பிரகாரங்கள் நடைபெற்றன. (தை -20 புனித செபஸ்தியார், ஆனி - 13 புனித அந்தோனியார், ஆவணி - 15 விண்ணேற்பு மாதா, நற்கருணைப் பெருவிழா). இந்த சுற்றுப் பிரகாரங்களின் போது மூன்று இடங்களில் மேடைகள் அமைக்கப் பெற்று சிறு மறையுரைகள், வழிபாடுகள் நடைபெற்றன. மழை இல்லாத போது புனித அந்தோனியாரின் திருச் சுரூபத்தை முற்றத்தில் வைத்து மழைக்காக மன்றாடும் வழக்கம் இருந்தது. இரண்டு மணித்தியாலங்களுக்குள் மழை நிச்சயம்.

## புனிதரின் வரலாறு

**புனித ஜியானா பெரட்டா மொல்லா**, இவர் 1922 ஒக்டோபர் 04ம் திகதி அல்பேர்ட்டோ பெரட்டா மற்றும் மரியா டி மிச்செல்லி ஆகியோருக்குப் பதின்மூன்று பிள்ளைகளில் பத்தாவதாகப் பிறந்தார். இவருடைய ஒரு சகோதரர் குருவாகவும், ஒரு சகோதரி துறவியாகவும் இருந்தார். இவர் மருத்துவத் துறை பயின்று மருத்துவரானார். இவருடைய கணவர் பியற்றோ மொல்லா இவர் ஒரு பொறியியலாளர். 24 செப்டெம்பர் 1955இல் திருமணம் செய்த இவர்களுக்கு 03 பிள்ளைகள் பிறந்தனர்.



அவர்களின் பெயர்கள் பியர்லூஜி, மரியோலினா, லோறா. நான்காவது குழந்தையை கருத்தரித்த போது கர்ப்பப்பையில் Fibroma நோய்க்கு உள்ளானார். மருத்துவர்கள் தாயின் உயிரைக் காக்கக் குழந்தையைக் கருக் கலைப்பு செய்யும் படி அறிவுறுத்தினர். இதன் மூலம் தாயின் உயிரைக் காப்பாற்றக் கூடியதாக இருக்கும் என்று அறிவுறுத்தினர். ஆனால் குழந்தை இறக்க நேரிடும்.

கத்தோலிக்கத் திருஅவையின் போதனைக்கு முரணாகக் கருக்கலைப்புச் செய்ய மறுத்த இவர் சிசேரியன் அறுவைச்சிகிச்சை மூலம் தனது நான்காவது குழந்தையான ஜியானா இம்மானுவேலாவை 21 ஏப்ரல் 1962 பிரசவித்தார். எனினும் நோயின் தாக்கத்தால் 28 ஏப்ரல் 1962 மருத்துவமனையில் உயிரிழந்தார். இக்குழந்தை பிற்காலத்தில் மரபணுத்துறை மருத்துவராக உருவானார்.

ஜியானா பெரட்டா மொல்லா 24 ஏப்ரல் 1994இல் திருத்தந்தை புனித 2ம் ஜோன் போலினால் முத்திப்பேறுபெற்றவராக அறிவிக்கப்பட்டார். அதே திருத்தந்தையால் 16 மே 2004இல் அவர் புனிதராகப் பிரகடனப்படுத்தப்பட்டார். அவரது திருநாள் ஏப்ரல் 28. அவர் தாய்மார், மனைவியர், குடும்பங்கள், கருவிலுள்ள குழந்தைகள், மருத்துவர்கள் ஆகியோரின் பாதுகாவலி ஆவார். 2015ம் ஆண்டு நடந்த உலக குடும்பங்களின் ஒன்றுகூடலுக்கு இணைப் பாதுகாவலியாகப் பிரகடனப்படுத்தப்பட்டார்.

## புனித யோசேப் வாஸ் பயன்படுத்திய முறைகள்

புனித யோசேவாஸ் நற்செய்தி மீன் அறிவிப்புப் பணியில் பல சிறப்பான வழிமுறைகளைப் பயன்படுத்தினார்.

**தொலைந்து போன ஆடுகளைத் தேடிக்கண்டுபிடித்தல்**

தன்னுடைய பணியை யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்த போது அதன் முதற்படியாகச் சிதறிப்போன கத்தோலிக்கரைத் தேடிக் கண்டுபிடிக்கும் முயற்சியில் இருந்து ஆரம்பித்தார். இதற்காக அவர் பயன்படுத்திய முறைகள் :

- ❖ **செபமாலை** - தன்னை ஒரு கத்தோலிக்கனாக அடையாளப்படுத்த யாழ்ப்பாணத்து நகர வீதிகளில் கழுத்தில் செபமாலை அணிந்தவராக அவர் நடந்தார். ஒல்லாந்தருடைய துன்புறுத்தல் மத்தியில் கத்தோலிக்கரின் அடையாளம் இழக்கப்பட்டிருந்தது. இதன் மூலமாகப் பலர் அவரை அடையாளம் கண்டு கொண்டனர்.
- ❖ **கிறிஸ்தவப் பாடல்கள்** - வீதிகளில் நடந்த போது மற்றவர்கள் அறிந்திராத கத்தோலிக்கருக்கு மட்டும் பரீட்சயமான பாடல்களைப் பாடிக் கொண்டு சென்றார்.
- ❖ **பிச்சையெடுத்தல்** - கத்தோலிக்கரை அடையாளம் காண்பதற்கான ஒரே வழி அவர்களுடைய வீடுகளுக்குச் செல்வதாகும் என்பதை உணர்ந்த புனிதர், பிச்சைக்காரனாகத் தன்னை உருமாற்றி வீடு வீடாகச் சென்றார். இதனால் டொன் பேதுரு எனும் ஒரு கத்தோலிக்கரை அடையாளம் கண்டார். அவர் மூலமாக ஏனைய கத்தோலிக்கரைக் கண்டு கொண்டார்.

**எனவே நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள் (மத் 28 : 19)**

**அருட்பணி. S. ஜெயரெத்தினம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுக நல சேவையில் 90 ஆவது அகவைக்குள் காலடி எடுத்து வைக்கும் இலங்கை திருச்சிலுவைக் கன்னியர்

சென்ற இதழ் தொடர்ச்சி...........

1.1992 - மறைமாவட்ட வைத்தியசாலை "சிலோம்" (SILOAM) மட்டக்களப்பு

2.1995-2001- "கனறா" வவுனியா நோர்வேயின் உதவியுடன் இடம்பெயர்ந்த கிராமங்களில் 18 நல நிலையங்களில் ஐந்து வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கான ஊட்டச்சத்து உணவுத்திட்டம்

3.1998 - தியோடோசியஸ் சுகாதார நிலையம், கற்கிடந்தகுளம், வவுனியா

கிராம சுகாதார ஊழியர்களுக்கான பயிற்சியையும் மற்றும் சுற்றியுள்ள கிராமங்களுக்கு நடமாடும் சுகாதார சேவையையும் CORDAID மற்றும் மெமிசா (MEMISA) நிதி உதவியுடன் முருங்கனில் ஆரம்பித்து பின்னர் அதனைச் சுற்றியுள்ள ஏறக்குறைய பத்து கிராமங்கள் வரை சென்றடைந்தது. இச்சுகாதார நிலையமானது தொடர்ந்தும் இற்றை வரை மருத்துவ உதவியினை கிராம மக்களுக்கு ஆற்றி வருகின்றது.

**4.2003 - மருதமடு அன்னை யாத்திரை திருத்தலம்**

இத்திருத்தலத்துடன் இணைக்கப்பட்ட சிறிய வைத்தியசாலையானது யுத்த காலத்தில் MSF என்னும் அரச சார்பற்ற நிறுவனத்தின் மேற்பார்வையின் கீழ் மடுவைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கு சுகாதார தேவைகளைப் பூர்த்தி செய்தது. காலப்போக்கில் மடுப்பிரதேசத்தை விட்டு வெளியேறிய போது திருச்சிலுவை அருட்சகோதரிகளிடம் ஒப்படைத்தது. யாத்திரிகர்களின் சுகாதார பராமரிப்பிற்கும் மேலாக சகோதரிகள் கிராமங்களுக்கான நடமாடும் சேவையையும் நடத்தி வருகின்றனர்.

**5.2005 - திருச்சிலுவை சுகநல நிலையம் - பரந்தன்**

சகோதரிகள் கிளிநொச்சி மருத்துவமனை, மல்லாவி, ஜெயபுரம் மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகளில் MSF உடன் இணைந்து இடம் பெயர்ந்த மக்களுக்கு குறுகிய காலத்திற்கு பணியாற்றியதுடன் பின்னர் வெளிநோயாளர் பிரிவை ஆரம்பித்தது பரந்தன் பகுதியை சுற்றி நடமாடும் சுகாதார சேவையையும் ஆரம்பித்தனர். தற்போது மருத்துவ வசதிகள் கொண்ட சுகநல நிலையமாக விருத்தியடைந்துள்ளது.

**6.2007 - புனித சூசையப்பர் சுகநல நிலையம், "ஸ்ரெலா மாறிஸ்" திருகோணமலை**

1995 இல் யாழ்ப்பாண வயோதியர் இல்லத்திலிருந்த வயோதியர்கள் இடம் விட்டு இடம் மாறி பல்வேறு இடங்களுக்கு சென்ற பின்னர் அவர்களின் புகலிடமாக திருகோணமலையிலுள்ள "ஸ்ரெலா மாறிஸ்" என்னும் இல்லத்தை அமைத்து. இவ்வில்லம் சுனாமியின் போது வெளிநாட்டு வைத்தியர்களுடன் இணைந்து தேவையான அத்தியாவசியத் தேவைகளை வழங்கியதுடன் தொடர்ந்தும் சேவையை வழங்குவதற்கு அவ்வளாகத்திலே சுகாதார நிலையத்தையும் அமைத்துள்ளது..

### 2005 திருச்சிலுவை விஞ்ஞான பாடசாலை - யாழ்ப்பாணம்:

எமது நீண்டகால விருப்பாகிய தாதியர் பாடசாலை 2005ம் வருடம் புரட்டாதித் திங்கள் நான்காம் நாள் யாழ்ப்பாணத்திலுள்ள திருச்சிலுவை வைத்தியசாலையில் ஆரம்பிக்கப்பட்டது. க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்தி பெற்றவர்கள் மூன்று ஆண்டு கால டிப்ளோமா பயிற்சியை ஆங்கிலத்தில் நிறைவு செய்த பின் அவர்கள் வேறு தனியார் வைத்தியசாலைகளில் தாதியப் பணியை மேற்கொள்ள வாய்ப்பாக அமைவதோடு குடும்பங்களுக்கும், சமூகத்திற்கும் முக்கிய பங்களிப்பிற்கு வழிவகுக்கின்றது எமது ஸ்தாபகர்களின் அடிச்சுவடுகளின்படி பெண்களுக்கான வலுவூட்டல் அளிப்பதே இப்பயிற்சியின் நோக்கம் என்பதை நம்புகின்றோம்.

2014ம் வருடம் முதல் இப்பாடசாலை க.பொ.த. உயர்தரத்தில் சித்தியடையாத இளம் பெண்களுக்கு ஒன்பது மாத அடிப்படை தாதியர் பயிற்சி, முதியோர் பராமரிப்பு தாதியர் பயிற்சி, தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் சுகாதார உதவியாளர் போன்ற பல்வேறு பயிற்சிகளையும் வழங்குகின்றது.

இவ்வாறு 1930 ம் வருடம் வித்திடப்பட்ட இச்சுகாதாரப்பணியானது தன்னுடைய பரவலை வெளியேற்றம், அரசியல் கொந்தளிப்பு, இடப்பெயர்வுகள், கட்டட மற்றும் கருவிகளின் பாதிப்பு போன்ற பல புயல்களை எதிர்கொண்டு இன்று இலங்கையின் ஒன்பது மறைமாவட்டங்களிலும் பாக்கிஸ்தானில் ஓர் மறைமாவட்டத்திலும் தன் கிளைகளைப் பரப்பி சேவையை ஆற்றும் ஓர் விருட்சமாக திகழ்கின்றது.

இவ்வாறு 1953ம் ஆண்டில் அன்னை அலோசியாவால் ஆரம்பிக்கப்பட்ட அவசர தாதியர் பயிற்சியானது வளர்ச்சியடைந்து முதுகலைப்பட்ட மட்டத்தை அடைந்தது. 1995 இல் கிழக்கு பல்கலைக்கழகத்தின் சுகாதார அறிவியல் விஞ்ஞான பீடத்தில் தாதியர் பட்டப்படிப்பினை ஆரம்பிப்பதற்கான வேண்டுகோள் கோரப்பட்ட போது எமது அருட்சகோதரி ஒருவர் அப்பல்கலைக்கழக போதனாசிரியராக இணைந்து கொண்டார்.

இதே போல் 2009ம் வருடம் தாதிய போதனாசிரியருக்கான வெலிசரவின் சர்வதேச சுகாதார அறிவியல் விஞ்ஞான நிறுவனத்திலிருந்து மற்றுமொரு கோரிக்கை வந்ததற்கிணங்க அருட்சகோதரிகள் சிலர் அங்கு கற்பித்தலை மேற்கொண்டனர். இதே ஆண்டில் இரு அருட்சகோதரிகள் கராச்சியிலுள்ள திருக்குடும்ப மருத்துவமனை தாதியர் பாடசாலையில் இணைந்து கொண்டனர்.

தற்போது திருச்சிலுவை அருட்சகோதரிகள் பல்வேறுபட்ட நிறுவனங்களில் தொழில்முறை தாதியர்களாக மற்றும் சுகாதார அறிவியல் கல்வியாளர்களாக திகழ்ந்து அருட்தந்தை தியோடோசியஸ் அவர்களின் தூர நோக்கினையும், எங்கு ஆசிரியர் பணி தேவையுள்ளதோ அங்கு சென்று பொருத்தமான சேவை செய்து எதிர்கால அன்னையர்களாக திகழவிருக்கும் இன்றைய கிராமப்புற இளம் பெண்கள் கல்வி கற்க வேண்டும் என்ற அன்னை பேர்னாடாவின் பணிக்கூற்றையும் நிறைவேற்றுகின்றனர்.

இவ்வாறான எல்லாவற்றையும் நோக்கும் போது திருச்சிலுவை அருட்சகோதரிகளான எம் வாழ்வில் கடவுள் என்ன செய்திருக்கின்றார் என வினவும் போது, நம்முடைய தாய் அன்னை மரியாளுடன் இணைந்து "கடவுள் நம் வாழ்வில் பல அற்புதங்களை செய்திருக்கின்றார், அவருடைய நாமம் தூயதாகும்" என்றே கூற முடியும்.

திருச்சிலுவை மகிமை விழாவினை கொண்டாடும் இன்றைய நாளிலே 18ம் நூற்றாண்டுக்கு முன்பிருந்த மூன்று இளம் பெண்களை நினைவு கூறுகின்ற வேளையில் அவர்கள் வித்திட்ட விதையின் மூலம் திருச்சிலுவைக் கன்னியர் சபையானது சுவிட்ஸலாந்திலுள்ள மென்சிங்கன் என்னும் இடத்தில் 1844ம் வருடம் ஐப்பசித் திங்கள் ஆரம்பிக்கப்பட்டது. இவ்விதையானது கிளை விட்டு நான்கு கண்டங்களில் உள்ள 18 நாடுகளில் பரந்து காணப்படுகின்றது.

மூன்று சுவிஸ் அருட்சகோதரிகள் 1930ம் வருடம் ஆடி மாதம் ஊர்காவற்துறையில் தம் பணியை ஆரம்பித்தனர். இதன் பலனாக இலங்கையின் ஒன்பது மறைமாவட்டங்களிலும் பாக்கிஸ்தானில் ஓர் மறைமாவட்டத்திலும் தன் கிளைகளைப் பரப்பி சேவையை ஆற்றும் ஓர் விருட்சமாகவும் திகழ்கின்றது.

மாகாணத் தலைவியின் ஆசிச்செய்தி

இவ்வருட திருச்சிலுவை மகிமை விழாவானது எமக்கு இரு முக்கிய நிகழ்வுகளுடன் ஆரம்பிக்கின்றது. முதலாவதாக, எமது சபை சுவிட்ஸலாந்திலுள்ள மென்சிங்கன் என்னும் கிராமத்தில் ஆரம்பித்து 175 வருடங்களை ஐப்பசி 17ம் நாள் நிறைவு செய்கின்றது. எமது சபையானது கிராமப்புறங்களில் வாழும் பெண்களின் கல்வியை கருத்திற் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட போதும் வளர்ந்து சமூகத்தின் பல்வேறு தேவைக்கேற்ப பரந்து காணப்படுகின்ற போதும் எமது நிறுவுனரின் விருதுவாக்கான காலத்தின் தேவைக்கேற்ப பணி புரிவதே இறை சித்தம் என்பதற்கேற்ப ஆசிரியப்பணியில் அக்கறை செலுத்தினர். அடுத்து, 1930 இல் ஏற்பட்ட தேவைக்கேற்ப இலங்கையின் வட மாகாணத்திலுள்ள ஊர்காவற்துறை என்னும் தீவில் மூன்று அருட்சகோதரிகள் தமது சுகநலப் பணியை ஆரம்பித்தனர்.

நன்றிப்பெருக்குடன் இவற்றை நினைவு கூறும் இவ்வேளையில் இவை யாவும் இறைவனின் அருள்வரங்கள் என நான் நம்புகின்றேன். இவை யாவற்றுடனும் இணைந்து நாம் பாக்கியம் பெற்றவர்களாக கடவுளின் இரக்கம் நிறைந்த அன்பையும், குணப்படுத்தலையும், முழுமையையும் அளித்து எல்லோரும் ஒன்றாக இணைந்து புதுப்பிக்கும் நம்பிக்கையுடன் கூடிய உற்சாகம் நிறைந்த இறையன்பைத் தாங்கிச் செல்லும் தூதுவர்களாக பயணிப்போம்.

நன்றி - அருட்சகோதரி விக்டரின்
திருச்சிலுவைக் கன்னியர்

## நமக்குள் பிறக்கின்றார்..........

அருட்பணி. N.C அருள்வரதன்

இயேசு பிறக்க வேண்டும்
நமக்குள் இயேசு பிறக்க வேண்டும்
புதிய நல்லுணர்வுகளாலே
தீமைகள் பகைமைகள் நமைவிட்டே
கலைந்தே மறைந்து போகும்போது
இயேசு நமக்குள் பிறக்கின்றாரே

இயேசு நமக்குள் பிறக்கின்றாரே
நம் வாழ்வில் உறவுகளை என்றுமே
நாம் மறந்துவிடவே கூடாதே
என்னதான் கடினங்கள் வந்தாலுமே
உறவுகள் இறைவனின் பரிசுகளாகும்
இதை நாம் உணர்ந்தே வாழும்போது
நமக்குள் இயேசு பிறந்து விட்டாரே

வறுமையின் வடிவிலே இயேசுபிரான்
வந்தே மண்ணிலே பிறந்தாரே
நாமம் நமைச்சூழ்ந்த வறுமைகளை
மாற்றிட முன்வந்து துணைபுரிய
நமக்குள் ஏற்பட்ட மனநிலையால்
நமக்குள் இயேசு பிறக்கின்றாரே

இனம் மதம் மொழிகளென்றும்
பேதங்களை நமக்குள் வளர்ப்பதால்
ஆகுவது ஒன்றுமே இல்லையே
அனைவரும் இறைவனின்
பிள்ளைகள் என்றும்
நமக்குள் புது உணர்வு
உருவாக்கும் போது
இயேசு நமக்குள் பிறக்கின்றாரே

பகைமைகள் நமக்குள் நிலைக்காமல்
உறவுகள் வளர முன்வந்து
அன்பினை மேலெனக் கொண்டு நாமும்
ஆர்வமாய் வளர்ந்து செல்லும்போது
உண்மையில் நமக்குள் இயேசுபிரான்
உதயமாகினார் உண்மை இதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்மஸ் சிறப்புப் போட்டி - 2019

- 2019 தை மாதம் முதல் கார்த்திகை மாதம் வரை வெளியிட்ட திருமலைதீபம் பத்திரிகையிலிருந்து வினாக்கள் எடுக்கப்பட்டுள்ளது
- விடைகளை இந்த இதழிலேயே எழுதி அனுப்பவும்
- போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது
- எல்லாரும் பங்குபற்றலாம்
- மிகச் சரியாக விடையளிப்பவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படும் (1ம்,2ம்,3ம் பரிசுகள்)
- எல்லாரும் மிகச் சரியாக பதில் அளித்தால் குலுக்கல் முறையில் பரிசில்கள் வழங்கப்படும்
- பரிசில்கள் முறையே:

1ம் பரிசு 500/- 2ம் பரிசு 300/- 3ம் பரிசு 200/-

01. "இறக்கத்தான் பிறந்தோம் அதுவரை இரக்கத்தோடு இருப்போம்" இவ் வரிகளுக்குச் சொந்தமானவர் யார்?
விடை :..........

02. திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் சிறுமலர்கள் என்ற பதிவிலிருந்து கற்றுக் கொண்ட விடயங்கள்?
விடை :..........

3. "தூய்மையை நாடுங்கள் தூய்மையின்றி எவரும் ஆண்டவரைக் காணமாட்டார்" இவ் விவிலியப் பகுதி இடம் பெற்றுள்ள நூல்?
விடை :..........

04. திருவிவிலியத்திலே "நாற்பது" என்ற எண்ணை பல இடங்களிலே பார்க்கிறோம். அவற்றில் மூன்றை எழுதுக?
விடை :..........

05. " SILENT NIGHT" எனும் பாடலை எழுதியவர் யார்? இப் பாடல் எத்தனை மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது?
விடை :..........

06. அருள்வாக்கு வாசிப்பு முறை என்பது என்ன?
விடை :..........

07. "விவிலியத்தை அறியாதவன் கிறிஸ்துவை அறியாதவன்" இவ் வார்த்தைக்கு சொந்தமானவர் யார்?
விடை :..........

08. புதிய உடன்படிக்கையின் மையம் அதாவது புதிய ஏற்பாட்டின் மையமாக இருப்பது?
விடை :..........

09. இயேசுசபைக் குருக்களால் ஆரம்பிக்கப்பட்ட அமைப்பின் பெயரையும்? அது எப்போது ஆரம்பிக்கப்பட்டது?
அதன் நோக்கம் என்ன?
விடை :..........

10. இலங்கைக்கு முதல் வருகை தந்த கத்தோலிக்க துறவறசபைக் கன்னியர்கள் யார்? எத்தனையாம் ஆண்டு? எப்பிரதேசத்திற்கு வருகை தந்தனர்?
விடை :..........

11. திருத்தந்தை பிரான்சிஸ் 2019 ஐப்பசி மாதத்தை என்ன மாதமாக பிரகடனப்படுத்தினார்? அதன் கருப்பொருளாக அமைவது?
விடை :..........

12. திருத்தந்தை பிரான்சிஸ் இளையோரைப் பாதிக்கும் மூன்று விடயங்களைக் குறித்து முக்கிய கவனம் செலுத்துகிறார். அவ் விடயங்கள் யாவை?
விடை :..........

13. எமது மறைமாவட்டத்தில் நடைபெற்ற செபமாலைப் பேரணி எங்கு ஆரம்பித்து? எங்கே நிறைவடைந்தது? எப்போது? இதனை ஒழுங்கமைத்த மறைக்கோட்டம் எது?
விடை :..........

14. 2019 பெப்ரவரி 21-24 வரை வத்திக்கானில் நடைபெற்ற அனைத்துலக ஆயர்களின் கூட்டத்தின் மையக்கருத்தாக அமைந்தது எது?
விடை :..........

15. 90வது அகவைக்குள் காலடி எடுத்து வைக்கும் சபை எது? எந்தப் பணியில்?
விடை :..........

16. சிலுவையின் இரண்டு வகைகளும் எவை? சிலுவைக் கம்பத்தை அறிமுகம் செய்தவர்கள் யார்?
விடை :..........

17. "நல்லாசிரியர் ஆளுமையும் ஆன்மீகமும்" எனும் தொடரை வெளியிட்ட அருட்பணியாளர் யார்? அவர் எந்த சபையைச் சேர்ந்தவர்?
விடை :..........

18. உயிர்ப்பு ஞாயிறு பெருவிழா அன்று குண்டு வெடிப்பினால் தாக்கப்பட்ட புனித அந்தோனியார் திருத்தலம் எப்போது அர்ச்சிக்கப்பட்டு மீண்டும் திறக்கப்பட்டது? யாரால் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது?
விடை :..........

19. 2019ம் ஆண்டு எத்தனை தலைப்புக்களில் எமது மறைமாவட்ட செயற்பாடுகள் நடைபெற்றது? அவை யாவை?
விடை :..........

20. திருகோணமலை மறைமாவட்டத்துடன் இணைந்து ஆரம்பிக்கப்பட்ட மறைமாவட்டம் எது? அம் மறைமாவட்டத்தின் ஆயரின் பெயர் என்ன?
விடை :..........

பெயர் :..........
பங்கு :..........
முகவரி: ..........

முடிவுத்திகதி : 30.01.2020

## மண்ணிலே பிறந்தாரே.......

அருட்பணி. N.C. அருள்வரதன்

இதோ கவிதை வரிகள் ...........
சரியாக வடிவமையுங்கள்

- வானிலே தாரகை தோன்றவே
- ஞானிலும் வந்து வாழ்த்தவே
- அன்னை மரியாள் தன் மகனை
- மண்ணிலே தந்து நின்றாரே
- தேமைந்தன் மானிடனாக
- தேடி எம்மை நாடி வந்தாரே
- மாடடையும் குடிலொன்று தான்
- மாபரனார் தேர்ந்த இடமாம்
- ஏழ்மை வடிவில் எம்மைத் தேடியே
- எமை மீட்க வந்தவர் இயேசு
- வானவர்கள் கீதங்கள் பாடவும்

இப்போது கவிதை வரிகளை சரியாக வடிவமையுங்கள்
எல்லாரும் சரியாக வடிவமைத்தால்
குலுக்கல் மூலம் தெரிவு இடம்பெறும்

1ம் இடம் 500/-
2ம் இடம் 300/-
3ம் இடம் 200/-
முடிவுத்திகதி 30.01.2020

## கவிதைப் போட்டி முடிவுகள்

### காலத்தைக் கணிப்போமே....

அருட்பணி. என்.சி. அருள்வரதன்

### சரியான கவிதை வரிகள்



- அறச் செயல்களை வாழ்வாக்கியே
- காலத்தை உணர்வோம் வாழ்வினிலே
- கடினங்களைப் புறந்தள்ளுவோம்
- "அன்பே" நமக்கு வேண்டியதாம்
- அதையே நாமம் செய்வோமே
- பிறர் துன்ப வேதனைகளை
- நமதென நாமே உணர்ந்து கொண்டே
- நாமே சொற்படும் போதுதான்
- நிறைவான ஆசீரை
- நாம் பெறுவோம் உண்மையே!

போட்டியில் கலந்து கொண்டவர்கள் : 13 பேர்
சரியாக எழுதியோர் : 02 பேர்
பரிசுத்தொகை சமமாக பிரித்து வழங்கப்படுகிறது.

ரூபா 500/-
N.S. சதுஸ்கரன்
216/12, சுடரொளி ஒழுங்கை,
பாலையூற்று
திருகோமலை

ரூபா 500/-
ஸ்ரேனா ஜெரோம்
6ம் வட்டாரம்
சாம்பல்தீவு

பங்கு கொண்டோருக்குப் பாராட்டுக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுவர்களுக்கான நிறம் தீட்டுதலும் 06 வித்தியாசங்களைக் கண்டுபிடித்தலும் போட்டி முடிவுகள்

இயேசு தண்ணீரை இரசமாக மாற்றியது.

ஆர்வத்தோடு பங்குபற்றிய சிறார்கள் : 24 சிறார்கள்

பரிசுக்குரியவர்கள்

1ம் பரிசு 500/- ரூபா
ஜே. லூவிஸ் றெஜினோல்ட்
4ம் ஒழுங்கை, பெரியகுளம்
சாம்பல்தீவு



2ம் பரிசு 300/- ரூபா
நியூட்டன் திமோசினா
இல 76/4, பேராலய வீதி
திருகோணமலை

3ம் பரிசு 200/- ரூபா
டேமியன்
இல : 676, அன்புவழிபுரம்
திருகோணமலை

பங்குபற்றிய அனைவருக்கும் நன்றியும் பாராட்டுக்களும்

## கிறிஸ்மஸ் சிறப்புப் போட்டி
### விடுபட்ட எழுத்துப் புதிர் போட்டி- 33
### புனித லூக்கா நற்செய்தி அதி 1-2 வரை

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வா | | | | க | | | | | | | | | | யா |
| | ■ | த | | | | | | | | இ | | | | ■ |
| | அ | | | | | | | ■ | அ | | தீ | ■ | | |
| த | | | | | ■ | ■ | | ஆ | | | | எ | | |
| | பே | | | | ■ | து | | | | | | | | |
| | | | ■ | | | | | | | | | | | |
| | | | ■ | இ | | | | | | | | | | |
| ■ | | அ | | | | | | | | | | | | |
| ■ | | உ | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| | பெ | | | | | | பி | | | | | | | |
| பா | ■ | | வி | | பே | | ■ | | | | | | | |
| ■ | ■ | | ■ | ■ | ■ | | ■ | | | | | | | ம |
| தா | | | | | | | | | ■ | பே | | ■ | | ■ |
| வ | | | | | | | த | | | | க | ■ | ம | ■ |



01. வா.....தூதரி........ம்
02. அரு......துசீ.....ர்
03.த........ம......னை
04.இடை......ர்கள்
05.பிற.....திரு.....கி.....ர்
06.தீ......னத் தொ......டியில்
07.து......களில் பொ.....ந்து
08.ஆ........டவ....கிய மெ.....யா
09.அரு.....மிக..... பெற்.....வரே
10.தா.....தின் அரி.....ணையை
11.யாக்.....பின் குடு.....பம்
12.இயே.........
13. மகி.....ச்சியூட்.......ம் ந......செய்தி
14. உ........ன......த்தில்
15. தம் உ.......ளத்தில் இ......த்தி
16.பே....ரசு
17. பெ.....ரை ப....வு
18. வி.....தி.....ல்
19.எ.... ஆண்ட.......ரின் தாய்
20. வ......ல் வெ.......யில்
21. பே......... பெற்.........வர்
22. பேறு..........லம்
23. அ........தி
24. பா.........கா
25. இ........வெ......லாம்
26. ம....... ஒப்......ந்தமா........வர்
27. கபி......யேல்
28. தலை.......றை
29. கட்........ளை

பெயர் :.......................................
முகவரி:.......................................
.......................................
பங்கு :.......................................


முடிவுத்திகதி : 30.01.2020

## சிறுவர்களுக்கான போட்டி
## படத்திலுள்ள 06 வித்தியாசங்களை கண்டுபிடித்தலும் நிறம் தீட்டலும்

01



02



- ❖ பாலர் முதல் தரம் 5 வரையுள்ள மறைக்கல்வி மாணவர்களுக்கு.
- ❖ திருமலைத்தீபத்தில் தரப்படும் படம் 01 இற்கு மாத்திரம் நிறம் தீட்டி வித்தியாசங்களை கண்டுபிடித்து படத்திலேயே குறிக்க வேண்டும். போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
- ❖ 1,2,3ம் இடங்களைப் பெறுபவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும்
  1ம் பரிசு - 500/= 2ம் பரிசு - 300/= 3ம் பரிசு - 200/=

பெயர் .......................................
முகவரி .......................................
பங்கு .......................................
தரம் .......................................
முடிவுத் திகதி 30.01.2020

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 100வது அகவையில்



- பெயர் - திரு ஜோன்பிலிப் லூயிஸ்
- பிறந்த இடம் - உடுவில் யாழ்ப்பாணம்
- வசிப்பிடம் - திருகோணமலை
- பிறந்த திகதி - 19.11.1919
- மனைவி - திருமதி லூர்த்துமேரி லூயிஸ்
- பிள்ளைகள் - 5 ஆண்கள், 3 பெண்கள்
- பேரப்பிள்ளைகள் - 19
- பூட்டப்பிள்ளை - 01
- வேலை - Royal British Navy
  (1948 – 1958) Srilankan Navy

**செபிப்போம் வாழ்த்துவோம்**

# ஆழ்ந்த அனுதாபங்கள்





**திருமதி. ஆஞ்சலின் சுப்பிரமணியம்**

பிறப்பிடம் - யாழ்ப்பாணம் சுண்டுக்குளியை பிறப்பிடமாகவும் திருகோணமலையை வசிப்பிடமாகவும் கொண்டவர்.

கல்வி - யாழ் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, திருகோணமலை புனித மரியாள் கல்லூரி போன்றவற்றில் கல்வி பயின்று பின் திருகோணமலை புனித மரியாள் கல்லூரியில் பயிற்றப்பட்ட ஆசிரியராக தனது பணியை ஆரம்பித்து பின் பிரதி அதிபராக அப்பாடசாலையில் பதவி உயர்த்தப் பட்டு 30 வருட சேவையின் பின் ஓய்வுபெற்றார்.

பணிகள் - கலைப்பணிகள் மட்டுமன்றி ஆன்மீக பணிகளிலும் ஆர்வத்துடன் புனித மரியாள் பங்கிற்கு சேவைகள் பல ஆற்றியுள்ளார்.
- மறைக்கல்வி பணியில் பொறுப்பாளராக கடமை புரிந்துள்ளார்.
- பிள்ளைகளிற்கு மறை உண்மைகளைக் கற்றுக் கொடுத்தல்
- மறைமாவட்ட தேசிய மட்டங்களில் இடம் பெற்ற பேச்சு, கட்டுரை, விவிலிய வினாவிடை போட்டிகளில் பிள்ளைகளை ஆயத்தம் செய்தல்

- கத்தோலிக்க நற்சிந்தனைகளை தொலைத் தொடர்பு சாதனங்களின் ஊடாக வழங்கினார்.
- "கத்தோலிக்க அருங்கொடை இயக்க மறுமலர்ச்சி" பேராலயத்தில் ஏற்பட்ட காலம் தொடங்கி இறுதி வரை தன்னார்வமுள்ள பொதுநிலையினருடன் இணைந்து தூய ஆவியின் அருளும் புது வாழ்வும் அனுபவ ஒன்று கூடலை வாரந்தோரும் திங்கட் கிழமைகளில் தொடர்ந்து பேராலயத்தில் ஆற்றிவந்தவர்.
- "சிந்தித்தால்"......... "ஆன்மீக பயணம்" ஆகிய நூல்களை எழுதியுள்ள இவர் "ஆரோபணம்" என்ற சிறுசஞ்சிகைக்கு ஆசிரியராகவும் விளங்கினார்.

**- திருமலைத்தீபம்**

# துயர் பகிர்கின்றோம்

அகில இலங்கை சமாதான நீதவானும், அருட்பணியாளர் S.S.ஜோன்பிள்ளை அவர்களின் சகோதரருமான அமரர் சந்தியாகுப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை அவர்கள் 07.12.2019 அன்று இறைவனடி சேர்ந்தார். அவரின் ஆன்மா இறைவனில் இளைப்பாற இறைவனிடம் வேண்டுவதுடன் இவரின் மறைவால் துயறுரும் மனைவி, பிள்ளைகள் மற்றும் உறவினர் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

எமது மறைக்கல்வி நிலையத்தில் பணியாற்றி வரும் திருமதி. ஜெயராஜ் ஜெனி அவர்களின் அன்புத் தகப்பனார் P. ராமசாமி அவர்கள் கடந்த 11.12.2019 அன்று காலமானார். இவரின் ஆன்மா நித்தியத்தில் இளைப்பாற இறைவனிடம் வேண்டுவதுடன் இவரின் மறைவால் துயருற்றிருக்கும் மனைவி, அன்புப் பிள்ளைகள், உறவினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**- திருமலைத்தீபம்**

# பிறந்தநாள் வாழ்த்துகள்



இறைவன் உம்மைப்
பெயர் சொல்லி அழைத்து
தம் பணியில் இணைத்து
பிறர் அன்பில் நிலைத்து
உறவுகளை மதித்து
இன்முகத்துடன் வாழ செய்ததை
எண்ணி வாழ்த்துகின்றோம் .

**செல்வி. கிறிஷாந்தா குரூஸ்**
01.12.2019

**இயக்குனர், பணியாளர்கள்**
**மறைக்கல்வி நிலையம், திருகோணமலை**

# 02ம் வருட நினைவு



| பிறப்பு | இறப்பு |
| --- | --- |
| 15 | 27 |
| 04 | 12 |
| 1959 | 2017 |

**திருமதி. பற்றிக் ஆரோக்கியம்**

என் அழகு தேவதை அம்மா
கள்ளம் கபடம் என்றால் என்ன
என்று தெரியாத குழந்தை நீ!

மறைக்க நினைத்ததில்லை உன்னிடத்தில்
எதையும் என்னையே நான்
தெரிந்து கொண்டேன் உன்னிடத்தில்
என் உயிர் தோழி நீ!

துன்பத்திலும் சிரிக்க கற்றுக் கொடுத்தாய்
உன் தைரியம் கண்டு அந்த துன்பம் கூட
உன்னிடம் தோற்றுப் போனதே!

நீ இருக்கும் இடத்தில் சந்தோஷத்திற்கு
குறைவிருந்ததே இல்லை அது
ஆலயமாக இருந்தாலும் சரி
ஆஸ்பத்திரியாய் இருந்தாலும் சரி

கண்டதில்லை உன் போல்
காதல் இறைவனிடம் !
அதனால் தானோ உன்னை
அவசரமாய் அழைத்தார் தன்
அரியணைக்கு

பாக்கியசாலிகள் நாம் உம்மை
எம் தாயாய் பெற்றதற்கு ! எம்
பாதுகாவலி நீ எமக்காய்
இறைவனிடம் மன்றாடும் !

**தகவல் : குடும்பத்தினர்**

# புனித மிக்கேல் ஆலய வருடாந்த திருவிழா - 2019

2018ம் ஆண்டு புதிதாக நிர்மானிக்கப்பட்ட சாம்பல்தீவு - கோணேசபுரி புனித மிக்கேல் ஆலயமானது இவ்வருடம் இறைமக்களின் நலன் கருதி பெரிப்பிக்கப்பட்டு 22.11.2019 வெள்ளிக்கிழமையன்று எமது மறைமாநில ஆயர் பேரருட்திரு கிறிஸ்ரியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகையால் அர்ச்சிக்கப்பட்டு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. 23.11.2019 அன்று அருட்பணி X.I. றஜீவ அவர்களால் மாலைப்புகழ்ச்சி ஆராதனை இடம்பெற்றது. 24.11.2019 ஞாயிற்றுக்கிழமையன்று திருவிழா திருப்பலியானது அருட்பணி இயூஜின் அ.ம.தி, அருட்பணி X.I. றஜீவ, பங்குத்தந்தை இ.யூட் சர்வானந்தன் ஆகியோரால் இணைந்து ஒப்புக்கொடுக்கப்பட்டது.













நல்லதையே சொல்லவும் செய்யவும் உங்களை ஆண்டவர் உறுதிப்படுத்துவாராக. (2தெச 2:17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org